NECF 40-நாள் உபவாசமும் பிரார்த்தனையும்

# உம் இராஜ்ஜியம் வருவதாக

7 ஆகஸ்ட் - 15 செப்டம்பர் 2013

# முன்னுரை

இந்த 40 நாட்கள் உபவாச ஜெபம் மலேசியாவின் யூபிலி வருடத்திற்குள்ளாக இடம் பெறுகிறது. 16 செப்டம்பர் 2013ல் இந்த உபவாச நாள் முடியும் பொழுது, சபா, சரவாக், மலாயா எனும் மூன்று தரப்பிலிருந்து உருவான மலேசியா 50 வருடங்களை எட்டியுள்ளது என்பதை வெளிப்படுத்தும். எனவே இன்றைய நிலையில் நமது நாடு எந்த நிலையில் இருக்கிறது என்பதனை அலசிப் பார்ப்பது நல்லது.

இயற்கை வளங்கள் நிறைந்தும், மேம்பாடுகள் அடைந்தும், பல இன மக்கள், சமயங்கள், கலாச்சாரங்கள் கொண்டும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறது. பலவகை வேறு பாடுகள் கொண்டுள்ள போதிலும், நமக்கு ஒரு குறிப்பிடத்தக்க தேசிய மேம்பாடு உள்ளது. அதில் அதிகமாக நாம் தேசிய ஒற்றுமையும், சுபீட்சமும் அனுபவித்து வருகிறோம். ஆயினும் கடந்த ஒரு சில காலமாக சில தரப்பினர், அரசியல் ரீதியிலாவது சமய ரீதியிலாவது, தங்கள் அதிகாரத்தை நிலை நாட்டும் பொருட்டு, சில பிரத்தியேக சலுகைகள் மற்றும் உரிமைகளை மிரட்டும் வகையில் கோரி வருகின்றனர். நாம் நவீனம் மற்றும் துரித மேம்பாடுகள் அடைந்திருந்தும், நம்மில் இன்னும் அநேக குடிமக்கள் இன்னமும் வறிய நிலையிலும் இம்முன்னேற்றத்திலும் பங்கில்லாதவர்களாகவும் காணப்படுகின்றனர். சாதனங்கள் பறிக்கப்பட்டு ஐசுவரியம் தவறான முறையில் பயன் படுத்தப்படுகிறது. சிந்திக்கும் சுதந்திரமும், தங்கள் சமயத்தை அமலாக்கம் செய்ய வல்ல அதிகாரங்களும் மறைந்து கொண்டே செல்லுகின்றன. இதுகாறும் பல்வேறு மக்கள் மத்தியில் பகிர்ந்து வந்த பாரம்பரியம், சுபீட்சமாய் செழிப்பில் ஜீவனம் பண்ணுவது, பொது நன்மைகளை அநுபவிப்பது போன்ற, தேசிய நலனை விட தங்கள் சொந்த சுயநலம் வெற்றி பெற வேண்டி அழுத்தங்கள் கொடுக்கும் பொழுது பாழாகின்றது.

மலேசியா தனது யூபிலி ஆண்டில் தொடரும் பொழுது கிறிஸ்தவ விசுவாசிகளான நாம் ஒரே நோக்கத்தை உடையவர்களாக இருந்து உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக என்று தேடுவோமாக. இதுவே இந்த 40 நாட்கள் உபவாச ஜெப காலத்தின் போது தெரிந்தெடுக்கப்பட்ட நமது கருப் பொருளாகும். இந்த காலத்தின் போது மலேசியாவிற்கு தேவனுடைய இராஜரீக திட்டங்கள் நிறைவேறுதலும் அவருடைய பிரசன்னமும், மாற்றம் கொண்டு வரும் வல்லமையும் நம் தேசத்தின் எல்லா வட்டங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி நிறைவேற்றம் காணப்பட மன்றாடுவோம். அண்மைய காலமாக நாம் கேட்டு வரும் குமுறல்களும், அதிருப்திகளும் நமது கர்ப்ப வேதனைகளை வெளிப் படுத்துகின்றன. அவருடைய இராஜ்ஜியமும், அவருடைய சித்தமும் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப் படுவதைக் காண நாம் கர்ப்ப வேதனையோடு ஜெபத்தில் தரித்திருப்போமாக. அதற்குப்பிறகு நாமே மாற்றங்களாய் இருந்து அவருடைய இராஜ்ஜியத்தை வரவேற்போமாக.

என்னுடைய நம்பிக்கை என்ன வென்றால் இந்த கைப்புத்தகம் உங்களை உற்சாகப்படுத்தி, இந்த தேசத்தை கட்டுவதில் தளராமலும், பராக்கிரமமுள்ள தேவனுக்கு செய்கிற ஆராதனை பலியாகவும் காணப்பட வேண்டும் என்பதுதான். மலேசியாவிற்காக கர்த்தரை தேடுவதில் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்களாக.

## இயூஜின் யாப்

**மலேசியா என்.இ.சி.எஃப் தற்காலிக பொதுச் செயலாளர்**

▶ மலேசியா என்.இ.சி.எஃப் தலைவர் இயூ ஹோங் செங் செய்தி

# உம் இராஜ்ஜியம் வருவதாக

அடுத்த 50 ஆண்டுகளில் கர்த்தர் தாமதிப்பாரானால், அரசியல் ரீதியில், சமூக ரீதியில், பொருளாதார ரீதியில் பாதுகாப்பு அற்ற நிலை ஏற்படும்.

'உம் இராஜ்ஜியம் வருவதாக' என்று சபை ஜெபிக்கும்பொழுது, எரேமியா போன்ற தீர்க்கதரிசி அதற்கு எழும்ப வேண்டும். உன் விக்கிரக இருதயத்திலிருந்து நீ விடுபடு என்பதுதான் யூதாவின் ஜனங்களுக்கு எரேமியாவுடைய செய்தியாக இருக்கும்.

'பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் எரேமியா ஏற்படுத்தப் பட்டான். (எரேமியா 1:10). சமாதானம் இல்லாதிருந்தும், சமாதானம் என்று ஜனங்கள் கேட்கிறார்கள்' (எரேமியா 6:14). எரேமியா சம்பவிக்கப் போகிற தண்டனையைக் குறித்துப் பிரசங்கித்தான். யூதாவின் தவறான வழிகளும் வழி தப்பிப் போன நெறிகளும் தங்கள் தலைவர்களால் சகித்துக் கொண்டிருந்த வேளையில், எரேமியா தங்களது விக்கிரக பாவங்களை வன்மையாக எதிர்த்தான். எரேமியாவின் செய்தி கட்டவும் நாட்டவுமான நம்பிக்கையின் செய்தியாக இருப்பினும் அவை பிடுங்கவும் அழிக்கவுமான சம்பவம் நடந்தேறிய பின் நிகழ்பவையாகக் காணப்படும். (எரேமியா 31:28,40).

நாம் ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயம் என்னவெனில் அநேக தேவ பிள்ளைகள் தேவனிடமிருந்து தங்கள் அன்பை விலக்கி மகத்தான கட்டளையை விட்டு வெறுமையான சாதனங்களாய் 'மரியாதைக்கான தொழுகை' என்பதைத் தழுவிக் கொண்டார்கள். பணத்தையும் சொகுசையும் முகாமையாக வைத்ததினால் நாமும் கூட நம் சமுதாயம், நெறி தவறிய மற்றும் தரம் நலிந்த நிலைக்கு போனதற்கு பொறுப்பாளிகளாக இருக்கிறோம். ஊழல் மற்றும் சிதைந்த சமுதாயமாக மாறின அடையாளங்களைக் கொண்டிருக்கிற சமுதாயத்திற்காக புலம்புவதின் மத்தியிலும், அதின் மூல காரணத்தை செவி மடுப்பது நல்ல காரியம். தேவ ஜனங்கள் தங்கள் தேவனைக் கை விட்டார்கள்.

நாம் மனந்திரும்பி அவருடைய வார்த்தையின் படியுள்ள கட்டளைகளைப் பின் பற்றுகிற வரையில் 'உம் இராஜ்ஜியம் வருக' எனும் வேண்டுதல் வெறும் காலி ராகமாகவே திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருக்கும்.

நாம் 'பூர்வ பாதை'களுக்குத் திரும்ப வேண்டும். (எரேமியா 6:16). நம் முழு இருதயத்தோடும் ஆண்டவரை நேசித்து, அவருடைய வார்த்தைகளைக் கனம் பண்ணி, பரிசுத்த ஜீவியத்தால் அவரை மகிமைப்படுத்தி, மற்றவர்கள் முன் நம் முன்மாதிரியான நடக்கையை காத்துக் கொள்வதே ஆண்டவருடைய தெளிவான பாதை.

நம் தேசமானது (உலகமும் கூட), நித்திய அழிவிற்கு சில பத்து ஆண்டுகளே உள்ளன. ஆண்டவருடைய வருகை மிக சமீபம். பாவத்தைக் கண்டிக்கிற மற்றும் ஆண்டவருடைய நல் வழிகளைக் காண்பித்து கண்ணீரோடு நியாயத் தீர்ப்பை தெரிவிக்கிற திருச்சபையே இந்த தேசத்திற்குத் தேவை

அப்பொழுதுதான் 'உம் இராஜ்ஜியம் வருக' என்ற வேண்டுதல் எனும் கதறல் அர்த்தம் உள்ளதாகக் காணப்படும்.

▶ டாக்டர் கூ கே ஹுப், என்.இ.சி.எஃப் ஜெப ஒருங்கிணைப்புத் தலைவர்.

# ஏன் நாம் ஜெபித்து உபவாசிக்க வேண்டும்

என்.இ.சி.எஃப் கடந்த 12 ஆண்டுகளாக இந்த 40 நாள்கள் உபவாச ஜெப இயக்கத்தை நடத்தி வருகிறது. கேள்வி என்ன வெனில் இத்தனை வருடங்கள் நடத்திய பின் இன்னும் தொடர வேண்டுமா? என்பதே.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இயேசு வராத பட்சத்தில், சாத்தான் இந்த உலகத்தில் இன்னும் அட்டகாசம் பண்ணிக் கொண்டிருக்கிற வரையில் ஆவியின் யுத்தத்தில் நாம் விழிப்புள்ளவர்களாகவும் ஜாக்கிரதை உள்ளவர்களாகவும் காணப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன். அப்போஸ்தலன் பவுல் எபேசியர் 6:10-12ல் விசுவாசிகளை நினைப்பூட்டுகிறார்.

கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில்,



மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

சோதனை வேளையை கடந்து செல்ல கெத்சமனே தோட்டத்தில் இயேசு செய்த ஜெபத்தைப் போல ஜெபிக்க வேண்டிய அவசியத்தை கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பர் (மத்தேயு 26:36-41). ஜெபத்தில் விடாமல் தரித்திருக்க வேண்டியதையும் நாம் அறிந்திருக்கிறோம். (லூக்கா 18:1-7). உபவாசிப்பது என்பது இன்னொரு பகுதி. உபவாசத்தைக் குறித்து, புதிய ஏற்பாடு மவுனமாகவே இருக்கிறது. இருப்பினும் ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெபிப்பது மாத்திரமல்ல, சில வேளைகளில் உபவாசமும் எடுக்க வேண்டும். சில ஜாதிப் பிசாசுகளை மேற்கொள்வதற்கு, உபவாசித்து ஜெபிக்க வேண்டும் என இயேசு தமது சீஷர்களுக்கு கற்பித்துள்ளார். (மத்தேயு 17:19-21 மற்றும் மாற்கு 9:23-29). மேலும் மணவாளன் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, அவருடைய சீஷர்கள் உபவாசிக்கத் தேவையில்லை என்று கூறுகிறார். (மத்தேயு 9:14-15; மாற்கு 2:18-20). தொடர்ந்து அப்போஸ்தலர் 13:1-3; 14:21-23 மற்றும் 2 கொரிந்தியர் 6:3-5; 11:25-27ல் அவரது சீஷர்களும் அப்போஸ்தலன் பவுலும் உபவாசித்து ஜெபித்தனர் என்று சொல்லப் பட்டிருக்கின்றது. பவுலும் தம் விசுவாசிகள் உபவாசித்து ஜெபிப்பதற்கு நேர காலத்தை நியமிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

இயேசு, அவரது சீடர்கள், அப்போஸ்தலர்கள் மற்றும் ஆதித்திருச்சபை முற்பிதாக்கள், உபவாசிப்பதை ஒரு ஒழுங்கு முறைமையாகப் பின் பற்றினது மாத்திரமல்ல ஆவிக்குரிய யுத்தத்தில் அதன் சம்பந்தத்தையும் புரிந்து வைத்திருந்தனர். அப்படியானால் இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு நாம் எவ்வளவாய் ஜெபித்து உபவாசிக்க வேண்டும்?

ஜேக் ஹேஃபோர்ட் சொன்னது போல: சபையில் உபவாசத்திற்கு ஒரு இடமுண்டு என புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் அறிந்து வைத்திருக்கின்றனர். ஆனால் வெகு சிலரே புரிந்து வைத்திருக்கின்றனர். ஆவிக்குரிய யுத்தம் குறித்த போதனைகளின் அவசியத்தை அநேகர் அலட்சியம் செய்வது போல போர்க் களத்தில் உபவாசமும் ஒரு வல்லமையுள்ள ஆயுதம் என்பதை கவனிக்காமல் விட்டு விடுகின்றனர். ஒரு சிலர் உபவாசத்தின் இடத்தையும் அங்கீகாரத்தையும் கேள்வி கேட்கின்றனர். இயேசு என்ன சொன்னார். நீ உபவாசிப்பாயாக என்று நேரடியான கட்டளையை பிறப்பிக்கா விட்டாலும் உபவாசத்தைப் பற்றி அநேக வலிமையான கூற்றுகளை கூறியுள்ளார். யுத்த வீரர்களாய் செயல்படுகிற அவற்றை புறக்கணிக்கவும் முடியாது, தள்ளிவிடவும் இயலாது.

எனவே இந்த 40 நாட்கள் உபவாச ஜெபத்தில் ஒரு ஒழுங்கிற்குள் நம்மை கொண்டு வருவோம். ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் இதனை நடப்பிக்க தேவன் உதவி செய்வாராக.

▶ என்.இ.சி.எஃப். ஆய்வுக்குழு

# "உம் இராஜ்ஜியம் வருவதாக" என்பதை புரிந்து கொள்வது.

உம் இராஜ்ஜியம் வருவதாக எனும் வாசகத்தை பலர் பலவிதமாக புரிந்து வைத்துள்ளனர். கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றையும் இறுதியாய் பூர்த்தியாக்குதலின் நம்பிக்கை என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் இஸ்ரவேல் தேசத்திற்கு கிறிஸ்து இரட்சகராகவும், மேசியாவாகவும் வருகிற தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் எனக் கருதுகின்றனர். இயேசுவின் நாட்களில் எல்லா மனிதர் மேலும் வரப் போகிற தேவ ஆளுகை என யூத ஜனங்களின் எதிர்பார்ப்பும் வாஞ்சையுமாய்க் காணப்படுகிறது. இந்த பூமியில் தேவ நோக்கம் நிறைவேற்றத்தை இது குறிக்கின்றது. மத்தேயு புத்தகத்தில் இந்த உணர்வுகள் வெளிப்படுகின்றன. அதாவது, சுவிசேஷ புத்தகத்தில் தேவ ஆளுகையின் வெளிப்படுத்தலானது, வாக்குத்தத்தமாக அறிவிக்கப்பட்டு, இச்செயலானது இயேசு எனும் நபர் மற்றும் அவரது கிரியைகளில் துவங்குகிறது என விவரிக்கிறார் எழுத்தாளர். நடைமுறையில் புவியின் மீது தேவ சித்தம் நடப்பதும் சர்வ அதிகாரமுள்ள தேவனின் ஆளுகை தற்போதைய ஒழுங்கின் காலத்தில் நன்மைகளினால் மாறுதல்களைக் கொண்டு வரும் என்றும் தெள்ளந் தெளிவாய் எடுத்துரைக்கின்றது

ஜெப நடையில் இந்த சொற்றொடர் உணர்வாக வெளிக் கொணரப் பட்டாலும், அது ஒவ்வொரு சீஷனிடத்திலும் விளைவைக் கொண்டு வந்திருக்கிறது. இன்ன வித ஜெபத்தை இயேசு தம் சீஷர்களுக்கு கற்றுக் கொடுத்திருப்பதின் வழி இது நிரூபணமாகிறது. சுவிசேஷத்தில் வெளிப்படுத்தின வண்ணம் கிறிஸ்துவுக்குள் வாக்களிக்கப்பட்ட தேவ ஆளுகை துவங்குகிறது என்பதற்கு ஒவ்வொரு சீஷனும் சாட்சியாய் இருக்கிறான். கிறிஸ்துவின் சீடர்களாய் இருக்கிற இன்றைய நாட்களில் நாம் தான் அந்த ஆசீர்வாதங்களை பெறுகிறவர்களும், கிறிஸ்துவின் ஆளுகையில் பங்குள்ளவர்களுமாய் இருக்கிறோம். அதன்படி தவிர்க்க முடியாத நெறி யாதெனில், இந்த சுவிசேஷத்தை நாம் பிரதிபலித்து, நம்மைச் சுற்றியுள்ளவர்கள், நமது அயலகத்தார், நாம் வாழுகிற சமுதாயம், மற்றும் நாம் வாழும் தேசத்தில் அடையாளங் காணும் பொருட்டு எடுத்துக் காட்டாக வாழ்வது தான்.

இதன்படி யூபிலி ஆண்டில் பிரவேசிக்கிற மலேசியக் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை வைத்திருக்கிற இடத்தில், நமது குடும்ப வாழ்வின் சாட்சியில், வேலை ஸ்தலத்தில், எங்கேயும் எப்பொழுதும், எல்லா வேளைகளிலும் நம்முடைய வாழ்க்கையில் தேவ ஆளுகையின் உண்மைத்துவத்தையும் பிரசன்னத்தையும் வெளிப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.



## அ. உபவாசம்

**உமது இராஜ்ஜியம் வருக** எனும் கருப் பொருளோடு மறுபடியும் 40 நாட்கள் உபவாச ஜெபத்திற்கு நுழைய நம்மை நாமே ஆயத்தப்படுகையில் உண்மையான உபவாசம் என்பது நமது இருதய நிலையைப் பொறுத்ததாகும் என்பதை நாம் நினைவு கூறுவோம். ஏன் நாம் ஜெபிக்கிறோம் என்றும் நான் என்ன செய்ய வேண்டும் என தேவன் விரும்புகிறார் என்பதையும் அறிதல் நலம்.

உபவாசம் என்பது உணவைத் தவிர்ப்பதும், சமய நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கி இருப்பதையும் விட இன்னும் அதிகமானது என ஏசாயா 58 வெளிப்படுத்துகிறது. வெறுமையான சடங்காச்சாரங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்துகிற மாய மாலமான இருதயத்தை தம் ஜனங்களிடம் தேவன் காண்கிறார். உத்தமமான கீழ்ப்படிதல் இருதயத்தில் இராமலும், உண்மையான மனந்திரும்புதல் காணப் படாமையுமான ஆழமற்ற தன்மையினால் தேவன் தம் தெரிந்தெடுத்த ஜனங்களுக்கு விரோதமாக தம் முகத்தைத் திருப்பிக் கொள்ள நேரிட்டது.

அவருடைய ஜனங்களாகிய நாம், நம் குடும்பத்தை, சமுதாயத்தை, தேசத்தை தேவனுக்கு நேராக திருப்ப வாஞ்சிக்கும் பட்சத்தில், தனிப்பட்டவராகவோ அல்லது குழுமமாகவோ நாம் உபவாசிக்கும் பொழுது நமது இலக்கு, உந்துதல், இருதய மனப்பாங்கு ஆகியவை எந்த அளவு ஊடுருவல் ஜெயம் இருக்கும் என்பதை இவை நிர்ணயிக்கிறதாய் இருக்கும். அவருடைய சித்தம் நமது சித்தமாக ஆகுவதற்கு, அவர் நம்மை தலைகீழாக மாற்றி அமைக்கும் பொருட்டு நாம் தனிப்பட்டவராகவோ அல்லது குழுமமாகவோ நமது இருதயத்தை ஆராய்ந்து, அவருக்கு இணங்கி, தொடர்பு இணைப்பை ஏற்படுத்தி நமது இருதயத்தை அவருக்கு ஏற்றதாக திருப்புவதற்கு நாம் அவருக்கு அனுமதி அளிக்கும் காலம் வந்து விட்டது. அப்பொழுதான் நமது சமூகத்தின் ஒவ்வொரு

அங்கத்திலும் அவருடைய சித்தம் செய்யப்பட ஊக்கமாக நாம் ஜெபிக்க முடியும்., தேவன் நம்மை ஆழ உழ வேண்டி எந்த அளவு நாம் அவருக்கு கீழ்ப்படிந்து அவருக்கு இடம் கொடுக்கிறோமோ, அவருக்கு எந்த அளவு இணங்குகிறோமோ, எந்த அளவு அவருடைய இராஜ்ஜியம் நமது இருதயங்களில் ஆளுகை செய்ய இடம் அளிக்கிறோமோ, அந்த அளவிற்கு நமது ஜெபத்தின் வலிமையும் காணப்படும்.

நமது இலக்கு தேவனுடைய புயத்தை முறுக்குவதற்காக அல்ல ஆனால் அவர் முகத்தைத் தேடி நமது வழிகளை தீங்கிலிருந்து விலக்கி அவருடன் நமது உறவு இன்னும் ஆழப்படவும், அவருடைய குரலுக்கு நமது செவி தீவிரமாய் கேட்கும் உணர்வுள்ளதாக இருக்கவும் வேண்டும் என்பதற்காகவே. மேலும் நமது உபவாச ஜெப அணுகு முறை பூரணத்துவமாக இருக்க வேண்டுமே அன்றி, ஒரு அமைப்புக்குள் அடங்கி விடுகிறதாக இருத்தல் கூடாது. தவிர அது தேவனுடன் வாழுகிற ஜீவியத்தை முழுமையாக்குகிறது. இராஜ்ஜிய தரங்களையும் கொள்கைகளையும் செயலாக்கத்திலும் கிரியைகளிலும் வெளிப்படுத்தி உப்பாகவும் வெளிச்சமாகவும் மற்றவர்களை ஆசீர்வதித்து தேவனை மகிமைப் படுத்துகிறதாகவும் இருக்க வேண்டும்.

உபவாசத்தின் போது, ஜெபத்திலும் அவருடைய வேதத்தை வாசிப்பதிலும் குறிப்பிட்ட நேரத்தை செலவு செய்யுங்கள். என்ன வித உபவாசத்தை மேற்கொள்ள வேண்டும் என தெரிந்தெடுப்பில் சுயாதீனமாய் செயல் படுங்கள்.

- **முழு உபவாசம்** : தண்ணீர் அல்லது திரவம் மாத்திரம். உணவு வகை
- **ஒரு வேளை உபவாசம்** : ஒரு வேளை உணவைத் தியாகம் செய்தல்.
- **தானியேல் உபவாசம்** : மாமிசம் தவிர்த்து பழங்களும் கீரை வகைகளும் மாத்திரம்.
- **மறுப்பு உபவாசம்** : அனுதினம் களிகூர்ந்திருக்கும் காப்பி, தேநீர், சாக்லட், இனிப்பு வகை போன்றவற்றிலிருந்து விலகி இருத்தல் (அநாவசிய மற்றும் புறங்கூறுகிற வார்த்தைகள் உட்பட)
- **ஊடகங்கள் உபவாசம்** : தொலைக்காட்சி, பத்திரிகை, கணிணி விளையாட்டுகள், சினிமா படங்கள், மின்னஞ்சல் போன்றவற்றை தவிர்த்தல்.

நீ உபவாசிக்கும் பொழுது, மற்றவர்களையும் சம்பந்தப்படுத்திக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும். கீழ்க்காண்பவை மற்றவர்களை ஈடுபடுத்தும் சில ஆலோசனைகள்:

- **குடும்ப உபவாசம்**: இல்ல பலிபீடத்தைக் கட்டும்பொழுது, குடும்பமாக உபவாசிக்கவும் ஜெபிக்கவும் ஒத்துக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர்களுக்கு தோதாய்க் காணப்படுகிற உபவாச வகையைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுங்கள். குடும்ப தியான நேரத்திற்கு, அன்றைய தின ஜெப கருப்பொருளிலிருந்து வார்த்தைகளை வாசித்து ஜெபியுங்கள்.
- **ஜீவியக்குழு உபவாசம்**: ஒரு குறிப்பிட்ட உபவாசத்திற்காக குழுவாக உபவாசிக்க சம்மதியுங்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் ஜீவியக் குழு உறுப்பினர்களுக்காக உபவாச ஜெபத்திற்கு ஒருங்கிணைத்து ஈடுபடுங்கள்.
- **அலுவலக உபவாசம்**: உங்கள் பணிமனையில் வேலை செய்கிற கிறிஸ்தவர்களை, ஒன்று சேர்ந்து உபவாசிக்க உற்சாகப்படுத்துங்கள். அந்த நாளுக்கான ஜெப முனைய பகுதியைத் தெரிந்து எடுத்து காப்பி ஓய்வு நேரங்களில் அல்லது மதிய உணவு வேளையின் போது கூடி ஜெபியுங்கள்.
- **கைப்பேசி / ஸ்கைப் உபவாசம்**: இக்காலத்து தொடர்பு யுகத்தில் சேர்ந்து ஜெபிப்பது ஒரு காத தூரத்தில் தான் இருக்கிறது. அனுதினமும் ஒரு நண்பரோடு தொலைப் பேசியில் நேர ஒதுக்கீடு செய்து ஜெபிக்க ஒப்புக்கொடுங்கள். குறிப்பிட்ட நேரத்தை ஏற்படுத்தி மன்றாடுங்கள். மற்ற சபைப் பிரிவு விசுவாசியோடு ஜோடி இணைந்து பிரார்த்தனை செய்வது வரவேற்கத் தக்கது.



## ஆ.கொடுத்தல்

- லூக்கா 12:48ல் கூறியபடி, எவனிடத்தில் அதிகம் கொடுக்கப் படுகிறதோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும். மலேசிய திருச்சபையை அதிகமாய் தேவன் ஆவிக்குரிய ரீதிலும் உலக செல்வங்களினால் அபரிதமாய் ஆசீர்வதித்து வருவதினால் நம்முடைய வருடாந்திர நன்கொடை சேகரிப்பைத் தொடருவோம். தேவை உள்ளவர்களை ஆசீர்வதிக்கவும், தேசிய மேம்பாட்டுத் திட்டங்களிலே உதவும் பொருட்டு அதின் நோக்கத்தை நிறைவேற்றவும் விசுவாசிகள் தங்கள் ஒரு வேளை உணவுக்கு செலவு செய்யும் தொகையை சேமித்து, இந்த நிதிக்கு விதைப்பதின் மூலம் உதவும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள். உங்கள் பணத்தை அனுப்ப உதவும் நான்கு வழி முறைகள்.

1. நீங்கள் உணவு உண்ணாமல் தவிர்த்து சேகரித்த அந்தப் பணத்தை கொடுக்கப்பட்டுள்ள உறைகளில் போட்டு வைக்கவும்.
2. உபவாசம் முடிவு பெற்ற வேளையில் நீங்கள் இது வரையில் சேகரித்து வைத்த பணத்தை எண்ணி மொத்தத் தொகையை காசோலை மூலம் கொடுக்கப்பட்டுள்ள உறையில் போட்டு எங்களுக்கு அனுப்பவும்.
3. உங்கள் காசோலையில் நீங்கள் குறிப்பிட வேண்டிய ஸ்தாபன வார்த்தை : NECF A/C 2
4. காசோலையின் பின் புறம் நீங்கள் எழுதி குறிப்பிட வேண்டியது: Designated to Charity 2013

## இ. மலேசியா எனது இல்லம்

நமது வருடாந்திர உபவாச நன்கொடை சேகரிப்பு அதனோடு இணைத்து, மலேசியா நமது இல்லம் எனும் திட்டத்திலும் தத்தெடுக்க கிறிஸ்தவர்களை அழைக்கிறோம். நமது நான்கு சுவர்களைத் தாண்டி தெருக்களிலும், அயலகத்திலும், சமூகங்களில், வேலை இடங்களில், பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் மற்றும் எங்கெல்லாம் நம் ஆண்டவர் நம்மை வைத்து வைத்திருக்கிறாரோ அங்கெல்லாம் நம் ஜெபத்தை எடுத்துச் செல்ல ஒரு உந்துதலாகும். அப்படி நாம் செய்யும் பொழுது, நமது தேசத்திற்கு கருணை செய்து தேவ இராஜ்ஜியத்தை சாட்சியாய் நிலை நிறுத்த ஆண்டவர் நமக்கு வாசல்களைத் திறந்து ஆசீர்வதிப்பார் என நான் நம்புகிறேன். ஆகவே அடுத்த 40 நாட்கள் முழுவதும் நீங்கள் உங்கள் தெருக்களில், அயலகத்தில், சமூகத்தில் ஸ்தாபனங்களில் சரீரப் பிரகாரமாக உபவாசித்து ஜெபிக்க உங்களை வேண்டிக் கொள்கிறோம்

▶ நாள் 1: | 7 ஆகஸ்ட்

# தேவனுடைய ஆளுகை

கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார். **சங்கீதம் 95:3**

இயேசு அப்பொழுது தான் ஜெபித்து முடித்தார். சீடர்கள் அவரிடம் வந்து ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கும் படி கேட்டார்கள். இப்படியாக ஜெபியுங்கள் என்று இயேசு பதில் அளித்தார். பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம் இராஜ்ஜியம் வருவதாக.

உம் இராஜ்ஜியம் வருவதாக என்றால் என்ன அர்த்தம்?. அது நம்முடைய ஜீவியம், குடும்பம், உலகம் மீது அவருடைய ஆளுகையும் ஆதிக்கமும் இருக்க வேண்டும் என்பதாகும்.

ஏன் அவருடைய ஆளுகை இருக்க வேண்டும்? பாவத்திற்கு முன்பதாக உலகத்தை தேவ இராஜ்ஜியம் ஆண்டு கொண்டு இருந்தது. உலகம் பூரணமும் பழுதற்றதுமாய் இருந்தது. எனினும் மனிதன் தேவனுக்கு கீழ்ப்படியாத போது இராஜ்ஜியம் அகற்றப்பட்டது. மாறாக பாவம், வியாதி, சாத்தான் ஆளுகைக்கு உட்பட்டது. அதுதான் மனிதகுல நேர்மையற்ற முறைமைகளுக்கும் சிருஷ்டிப்பின் அழிவிற்கும் துவக்கமானது. எனினும் தேவன் தம் சிருஷ்டிப்பைக் கை விடவில்லை. தமது ஒரே பேரான குமாரனை மனிதருடைய பாவங்களுக்காக மரிக்கும்படி அனுப்பினார். இதுவே இப்புவியிலும் மானுடர் மத்தியில் அவருடைய இராஜ்ஜியத்தின் மறு பிரவேசத்திற்கும் வித்தாக அமைந்தது. இதன் வழி நம்முடைய வாழ்க்கையில், குடும்பத்தில், உலகில் மறுபடியும் அவருடைய இராஜ்ஜியம் நிலை நிறுத்தப்படுகிறது.

**ஜெப குறிப்புகள் :**

- ☐ திருச்சபை இணக்கமும் இராஜாவின் ஆளுகையை முன் நிறுத்தவும் ஜெபியுங்கள்.
- ☐ ஆண்களும் பெண்களும் தேவனுடைய ஆளுகைக்கு திரும்ப ஜெபியுங்கள்.
- ☐ நம் தேசத்தில் தேவ ஆளுகை ஸ்தாபிக்கப்பட ஜெபியுங்கள்.
- ☐ இந்த தேசத்தில் தேவ ஆளுகை ஸ்தாபிக்கப்படுகிற வேளையில் நம்
- ☐ தேசமும் நிலைவரப் படும்படியாக ஜெபியுங்கள்.

▶ நாள் 2: | 8 ஆகஸ்ட்

# இராஜ்ஜியத்தின் மூலம் மாறுதல்

நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய இராஜ்ஜியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. **லூக்கா 11:20**

இயேசு இப்புவியில் ஊழியத்தைத் துவங்கின பொழுது ஒரு பெரிய எழுப்புதலைக் கலிலேயாவில் கொண்டு வந்தார். ஜனங்கள் வார்த்தைக்கு தாகம் கொண்டனர், பாவிகள் தேவனிடம் திரும்பினார்கள். வியாதியஸ்தர் சுகம் அடைந்தனர், ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற்றனர். திரளான ஜனங்கள் வார்த்தையை செவிமடுக்க கூடினர், முழு சமுதாயமே விழித்து எழும்பினர். இந்த தாக்கத்திற்கு பின்னணி என்ன? அது இராஜ்ஜியத்தின் பிரசன்னம். தேவனுடைய இராஜ்ஜியம் வந்து விட்டது என்று இயேசு பறை சாற்றினார். இராஜ்ஜியம் வரும் பொழுது இருதயங்கள் மாறுகின்றன, ஜீவியங்கள் உரு மாற்றப் படுகின்றன, சமுதாயங்கள் நிலை நிறுத்தப்படுகின்றன, தேசமும் மாற்றம் அடைகின்றன. இன்றைக்கு நமது தேவை என்ன வென்றால் அவருடைய இராஜ்ஜியத்தின் பிரசன்னமே.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ சபைகள் இராஜ்ஜியத்திற்கு வாஞ்சிக்கவும், அது வெளிப்படவும் ஜெபியுங்கள்.
- ☐ இராஜ்ஜியம் இந்த தேசத்தின் அகலம், நீளம், சகலவற்றிலும் ஸ்தாபிக்கப்பட ஜெபியுங்கள்.
- ☐ இராஜ்ஜியத்தின் பிரசன்னத்தில் ஆண்களும் பெண்களும் அதின் தாக்கங்கள் பெற ஜெபியுங்கள்.
- ☐ இந்த தேசம் இராஜ்ஜியத்தின் பிரசன்னத்தினால் உரு மாற்றம் பெற ஜெபியுங்கள்

▶ நாள் 3: | 9 ஆகஸ்ட்

# இராஜாவை எதிர்கொண்டு அழைத்தல்

வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார். **சங்கீதம் 24:7**

ஒவ்வொரு இராஜ்ஜியத்திற்கும் ஒரு இராஜா இருப்பார். தேவ இராஜ்ஜியத்தின் அபிஷேகம் பண்ணப்பட்ட இராஜாவானவர் இயேசு. அவரே இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தரும் ஆனவர். எங்கே இராஜா வீற்றிருக்கிறாரோ அங்கே தேவ இராஜ்ஜியம் பிரசன்னமாய் இருக்கும். இயேசு இராஜ்ஜியத்தின் வல்லமையை அறிவித்தும் வெளிப்படுத்தியும் இருந்தார். காரணம் அவரே இராஜாவாக பிரசன்னரானார். இராஜ்ஜியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் நாம் இராஜாவை ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்கே இராஜா உயர்த்தப்படுகிறாரோ அங்கே இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுகிறது. எங்கே இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுகிறதோ அங்கே அவருடைய வல்லமை வெளிப்படுகிறது. இராஜாவை எதிர் கொண்டு வரவேற்கிற நாம் இராஜ்ஜியத்தையும் வரவேற்கிறோம்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ சபை கீழ்ப்படிந்து இந்த தேசத்தின் எல்லை எங்கும் இராஜாவை உயர்த்த ஜெபியுங்கள்.
- ☐ ஆண்களும் பெண்களும் இராஜாவுடைய அழகையும் மகிமையையும் காண ஜெபியுங்கள் .
- ☐ இராஜாவுடைய ஆளுகைக்கு ஆண்களும் பெண்களும் தங்கள் இருதயத்தைத் திறக்க ஜெபியுங்கள் .

▶ நாள் 4: | 10 ஆகஸ்ட்

# இராஜ்ஜியத்தின் வல்லமை

முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். **எபிரெயர் 2:3-4**

இயேசுவின் முதல் 30 வருட ஜீவியத்தின் போது அவர் ஒரு அற்புதமோ, சுகமளிப்போ செய்யவில்லை. ஆனால் யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, அவர் இராஜ்ஜியத்தை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் அறிவிக்கத் துவங்கினார். அந்த மாற்றத்தைக் கொண்டு வந்தது எது? அது தேவனுடைய ஆவி ஆகும். அவருடைய ஞானஸ்நானத்தின் போது தான் பரிசுத்த ஆவியானவர் புறாவின் ரூபத்தில் அவர் மீது இறங்கினார். அதன் பிறகு அவர் கலிலேயாவுக்கு ஆவியின் வல்லமையோடு திரும்பினார். தேவ ஆவி இராஜ்ஜியத்தின் வல்லமையில் தரித்திருக்கிறது. இந்த ஆவியின் வல்லமையில் தான் இயேசு எல்லா சுகம் அளிப்பும் அற்புதங்களும் செய்தார். பரலோகத்தின் தேவனை நாம் வேண்டிக்கொள்ளும் போது, இந்த அதே வல்லமை தான் நமக்குள்ளும் நம் மூலமாகவும் கிரியை செய்கிறது ஏனெனில் அந்த வல்லமை நம்முடன் இருக்கிறது.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ ஆவியின் வல்லமைக்கு திருச்சபை திரும்பும்படி ஜெபியுங்கள்.
- ☐ ஆவியின் வல்லமைக்கு திருச்சபையை நிரப்ப ஜெபியுங்கள்.
- ☐ அற்புதங்களோடும் அடையாளங்களோடும் ஆவியின் வல்லமை நிலை நிறுத்தப்பட ஜெபியுங்கள்.
- ☐ ஆண்களும் பெண்களும் ஆவியின் வல்லமையில் உணர்த்தப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டு, மாற்றப்பட ஜெபியுங்கள்.

▶ நாள் 5: | 11 ஆகஸ்ட்

# வரப்போகும் இராஜ்ஜியம்

ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.
**வெளி.விசேஷம் 11:15**

அவருடைய இராஜ்ஜியம் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்திலும் வல்லமையிலும் பிரசன்னமாய் இருக்கும் வேளையில், அவருடைய இராஜ்ஜியத்தின் முழுமை இன்னும் வர வேண்டியிருக்கிறது. இது எப்பொழுது நடைபெறும்? அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தமது எல்லா பரிசுத்தவான்களோடும் இந்த பூமியை ஆளவும் ஆளுகை செய்யவும் வரும் பொழுது இடம் பெறும். அந்த நாள் வரும் பொழுது, தேவனுடைய இராஜ்ஜியத்தை இந்த பூமியில் இருப்பதை சரீர கண்களோடு இந்த உலகம் காணும். அதே வேளை பூமி உண்மையான சமாதானத்தையும் நீதியையும் நியாயத்தையும் அனுபவிக்கும் காரணம் என்னவெனில் அப்பொழுது இராஜாதி இராஜா ஆளுகை செய்வார். இது தான் சுவிசேஷங்களின் முழுமை நிறை வேறுதலும் சுத்திகரிப்பின் பூரணமுமாம். இது தான் நித்திய மாற்றத்தை ஸ்தாபிப்பதாகும். நாமும் இந்த சம்பவத்திற்காகவும் அவர் வருகைக்கென காத்திருப்பதின் மூலமும் ஜெபத்தின் வழி துரிதப் படுத்தலாம்.

**ஜெப குறிப்புகள்:**
- ☐ இராஜாவின் மறு வருகைக்கு ஜெபிப்போம்.
- ☐ உலகத்தின் முழு நிலைவரத்திற்கு ஜெபிப்போம்.
- ☐ இராஜாவை வரவேற்க நம் தேசம் ஆயத்தப்பட ஜெபிப்போம்.
- ☐ கிறிஸ்துவின் மணவாட்டியாகிய திருச்சபை கலியாணத்திற்கு ஆயத்தமாயிருக்க ஜெபிப்போம்.

▶ **நாள் 6:** | 12 ஆகஸ்ட்

# இராஜ்ஜியத்தின் இராஜா

இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.
**யோவான் 18:36**

தேவனுடைய இராஜ்ஜியம் ஆதாரத்துவ வாழ்க்கை முறையை உண்டாக்குகிற மூல ஆதாரத்துவமே அன்றி ஒரு பொதுக் கருத்து என்று மாத்திரம் எடுத்துக் கொள்ளக் கூடாது. இரண்டு இராஜ்ஜியங்களே இங்கு உண்டு. அதாவது தேவ இராஜ்ஜியமும் இந்த யுகத்து இராஜ்ஜியமும். ஒரு நடு நிலை சாசனம் என்று அல்ல. ஒன்று நாம் கிறிஸ்துவின் ஆளுகையில் வாழ வேண்டும் அல்லது அவருக்கு அல்லாததில் வாழுகிறவர்களாக இருப்போம். இந்த இரண்டு இராஜ்ஜியங்களுக்கும் எப்போதும் போராட்டம் நடந்து கொண்டே இருக்கும். நாம் இயேசுவுக்கு இணங்கும் பொழுது, தேவனுடைய இராஜ்ஜியமும், தேவ வார்த்தையும் விடுவிக்கப் படுகிறது. ஆனால் இயேசுவையும் தேவ வார்த்தையையும் மறுக்கும் பொழுது அந்த மற்ற இராஜ்ஜியம் விடுவிக்கப்படுகிறது. இயேசு நம்முடைய ஆண்டவரும் இராஜாவாகவும் இல்லாவிட்டால் அவர் நம்முடைய இரட்சகராக இருக்கவே முடியாது. இராஜ்ஜியம் இல்லாமல் நற்செய்தி இல்லை, அது போல இராஜா இல்லாமல் இராஜ்ஜியம் இல்லை. இயேசுதான் அவருடைய இராஜ்ஜியத்தின் இராஜா. அவருடைய இராஜ்ஜியம் இந்த பூமிக்கு உரியதும் இல்லை அது இந்த உலகத்தில் இருந்து உருவானதும் இல்லை. மற்ற எல்லா இராஜ்ஜியங்களும் நிறுத்தப்படும் பொழுது, தேவனுடைய இராஜ்ஜியம் நித்தியத்திற்கு தொடர்ந்து செல்லும். 'அசைக்கப்படாத இராஜ்ஜியமும் மாறாத நபரும்' எனும் தமது புத்தகத்தில் எச்.ஜி.வெல்ஸ் என்பவர்' தற்போதைய உலக ஒழுங்கை, தேவ ஒழுங்கைக் கொண்டு மாற்ற மூல ஆதார பிரேரணை இதோ - அது தேவ இராஜ்ஜியம்' என்று கூறியிருக்கிறார். தேவனுடைய இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது.

## ஜெப குறிப்புகள்:

- ☐ யோவான் 18.36 மற்றும் மத்தேயு 12:25-30ஐ பிரதிபலி. இயேசு உனது இரட்சகர். உனக்கு இராஜாவாகவும், உன் வாழ்வின் எல்லா பாகங்களையும் ஆளுகை செய்ய நீ இணக்கம் தருவாயா
- ☐ நீ இன்னும் முழுமையாக இயேசுவின் ஆளுகைத் தன்மைக்கு உன் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்காத பகுதிகளை காண்பிக்கும் படி பரிசுத்த ஆவியானவரைக் கேள். அந்தப் பகுதிகளில் மனந்திரும்பு. சரியான இடத்தை எடுக்க இயேசுவை வரவேற்பாயாக.
- ☐ அவருடைய இராஜ்ஜியம் உன் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும்
- ☐ அனுதினமும் சரணடைவதின் வழி வரும் பொருட்டு உன் இருதயத்தை தேவன் ஆயத்தப்படுத்தி நீ ஒப்புக்கொடுக்க ஜெபி.
- ☐ தேவ இராஜ்ஜியத்தின் வழிகளை கற்றுக்கொடுக்க, இராஜ்ஜிய வாழ்க்கை முறையை நீ கைக்கொள்ள உன்னை நிரப்ப ஜெபி.

பிரகடனம்: *இயேசு இராஜாவே, உம்மை என் வாழ்க்கையில் வரவேற்கிறேன். என்னுடைய இருதய சிங்காசனத்திலிருந்து இறங்கி வந்து உம்மை வரவேற்று என் வாழ்க்கையின் இராஜாவாக அரசாட்சி செய்யும்படிக்கு அழைக்கிறேன். உம்முடைய இடத்தை நீர் எடுத்துக் கொண்டு உமது இராஜ்ஜியம் வரச் செய்யும். உமது சித்தம் முழுமையாக என்னில் செய்யப்படட்டும்.*

▶ **நாள் 7:** | 13 ஆகஸ்ட்

# இராஜ்ஜியத்தின் கோட்பாடுகள்

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். **ரோமர் 12:2**

இராஜ்ஜியத்தைக் குறித்ததான இயேசுவின் போதனை, இக்காலத்து முறைமைகளுக்கும் நெறிகளுக்கும் முரணாயிருக்கிறது. அவருடைய வார்த்தைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இணக்கமாய் நாம் இல்லையென்றால் நாம் அவருடைய இராஜ்ஜியத்தில் முன்னேறவோ பலன் தரும் சாட்சியாகவோ ஒருக்காலும் இருக்க முடியாது. நம்முடைய வலிமையை அநேகந்தரம் இக்காலத்து உலகத்தின் விதிகளும் தரங்களும் மேற்கொண்டிருக்கின்றன. நாம் செய்ய வேண்டியது யாதெனில் நமது சுயத்திற்கு நாம் மரிப்பது தான்.

அப் 17:6, பவுலும் சீலாவும் அவருடைய இராஜ்ஜியத்தின் கோட்பாடுகளுக்கு வேறு எதையும் ஈடு கொடுக்காமல் அதின் மூலம் அன்றைய நிலையையே அசைத்தார்கள். அவருடைய மகிமைக்கென இந்த பட்டிணத்தையும், நகரத்தையும் சமூகத்தையும் வலிமையான தாக்கம் உண்டாக்குகிற வாஞ்சை உனக்கு இருக்குமானால் அதற்கு குறுக்கு வழி ஏதும் இல்லை. நமக்கு மூல ஆதார மாற்றம் இருதயத்திலும் மனத்திலும் தேவையாய் இருக்கிறது. அவருடைய வார்த்தையின் ஆதாரத்திற்கு ஏற்ப நமது மதிப்பையும் கோட்பாடுகளையும் நேராக்கினால் தான் அவருடைய இராஜ்ஜியம் வரும், அவருடைய சித்தம் செய்யப்படும்.

## ஜெப குறிப்புகள்:

- ☐ உனது முன்பிருந்த நிலையை விட்டு விடு. ஒத்த வேஷந்தரிக்கிற விசுவாசத்தை சரணடை, ஆண்டவரிடம் மனு செய்.
- ☐ தீங்கான பொய்யிலிருந்து விடுதலையாகும்படி ஜெபம் செய். மகிழ்ச்சியுடன் சுயத்திற்கு சாகும் படியான அழைப்பை ஏற்றுக்கொள். உண்மையான சுதந்திரத்தை கிறிஸ்துவுக்குள் அனுபவி.
- ☐ சமுதாயத்தோடு எல்லா நிலைகளிலும் ஒட்டிக் கொள்ளாமல் உன் அன்பையும் இரக்கத்தையும் தேவ உதவியோடு காண்பிக்க ஜெபி.

பிரகடனம்: *சுய பெருமையை என் இருதத்திலிருந்து வெறுத்து ஒதுக்குகிறேன். விடுதலையும், இரட்சிப்பும் தேவனிடத்திலிருந்து வருகிறதென்று அறிவிக்கிறேன். அவர் என்னை எல்லா சத்தியத்திற்குள்ளும் நடத்துவார். என் பாதுகாப்பிற்கு வேண்டி இதுகாரும் நான் சார்ந்திருந்த எல்லாவற்றிலிருந்தும் எல்லாரிலிருந்தும் என்னை விடுவித்துக் கொள்கிறேன். தேவன் ஒருவரே நம்பகத்திற்கு உரியவர். அவரை மாத்திரம் நான் சேவிப்பேன். பின் பற்றுவேன். தேவனுக்கு கீழ்ப்படியும் பொருட்டு என் சுயத்திற்கு சாக முன் வருவேன்.*

▶ **நாள் 8:** | 14 ஆகஸ்ட்

# இராஜ்ஜியத்தின் வல்லமை

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. **ரோமர் 14: 17**

தேவனுடைய இராஜ்ஜியம் பரிசுத்த ஆவிக்குள் இருக்கிறது என்று ரோமர் 14: 17 நமக்கு சொல்லுகிறது. பரிசுத்த ஆவிக்குள் தேவ இராஜ்ஜியம் எனும் ஆட்சி உண்டு. பரிசுத்த ஆவியின் வல்லமை இராஜ்ஜியத்தின் உண்மையான வெளிப்பாட்டைக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தவரே பரிசுத்த ஆவி தாம். சரணடைந்த விசுவாசியின் உள்ளத்திலிருந்து ஓடி வருகிற நதி என்று இயேசு சொன்னதும் அந்த ஆவி தான். அது ஜீவனையும் புதுப்பித்தலையும் தருகிறது. நாம் அந்த பரிசுத்த ஆவியின் வல்லமையில் வாழ்வதற்கு சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். பரிசுத்த ஆவியின் வல்லமையில் வாழுகிற பொறுப்பானது நம்மை இரகசிய இடங்களுக்கு அழைத்துச் சென்று அவருடன் ஓர் ஆழமான இடைபடுதலை அனுபவிக்க கதற வேண்டும். அப்பொழுது அவருடைய வல்லமை நமக்குள் பாய்ந்து காரியங்களை மாற்ற வல்லதாக்கும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ பரிசுத்த ஆவியினால் நிறைந்து காணப் படுவதற்கு தடையாய் இருக்கிற எதையும் உன்னிலிருந்து அகற்றுவதற்கு நீ மனந்திரும்பு.
- ☐ தேவனோடு ஓர் உறவிற்குள் கடந்து செல்ல தேவன் உனக்கு ஆழமான தாகத்தைக் கொடுக்க ஜெபி.
- ☐ பரிசுத்த ஆவி ஊற்றப்படுகிற ஒரு கால்வாயாக இருந்து உன்னைச் சுற்றிலும் இருக்கிற மற்றோருக்கு பயன்பட உன்னையே ஒப்புக்கொடு.

பிரகடனம்: *இராஜா என்னில் ஜீவிப்பதினால் தேவ இராஜ்ஜியம் என்னுள் இருக்கிறது என்று நான் பிரகடனம் செய்கிறேன். தேவனுடைய வார்த்தைக்கு முரண்பாடாய் விளங்குகிற எந்த ஒரு பொய்யையும் நான் மறுக்கிறேன். வஞ்சிக்கும் வல்லமைகளை என் வாழ்விலிருந்து செயலிழக்கச் செய்கிறேன்.என்னுள் வாழ்கிற பரிசுத்த ஆவியானவர் நான் ஒரு தெய்வீக வாழ்வை வாழ்வதற்கு என்னை வல்லமையில் கடந்து போகச்செய்வார் என்று நான் நம்புகிறேன். என்னுள் இருக்கிற என் உள்ளான மனிதனிலிருந்து ஜீவ நதி புறப்பட்டுச் சென்று ஜீவனையும் மாற்றங்களையும் என்னைச் சுற்றியுள்ளவர்களிடம் கொண்டு வரும் என்று நான் பிரகடனம் செய்கிறேன்.*

▶ நாள் 9: | 15 ஆகஸ்ட்

# இராஜ்ஜியமும் ஆசாரியரும்

தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு,. எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள். **வெளி 5: 9-10**

நமக்கு தோல்விகள், குறை பாடுகள் இருப்பினும், நாம் தேவன் கரங்களில் இருந்து வல்லமையான மாற்றங்களின் முகவர்களாக அவருடைய இராஜ்ஜியத்தில் முன்னேற, அவருடைய மீட்பின் திட்டத்தை செயலாக்கம் செய்ய, எல்லா நிலைகளிலும் உள்ள சமுதாயத்தின் மத்தியில் நம்பிக்கையும் சுகத்தையும் கொண்டு வருகிறவர்களாக இருக்கிறோம். தேவனது நோக்கம் மோட்சத்திற்கு நாம் போகிறவர்களாக மாத்திரம் அல்ல ஆனால் உன்னிலும் உன் மூலமாகவும் வான இராஜ்ஜியத்தின் உண்மையான ஜீவியத்தை வாழுகிறவர்களாக இருக்க அவர் விரும்புகிறார். வெளி 5:8-10ல் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக அவருடன் ஆண்டு கொண்டு அரசாளவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். நமது பூமியில் வழி நடத்தவும் ஆளுமை பெறவும் அழைக்கப்பட்டிருக்கிறோம். சபையிலோ அல்லது சமுதாயத்திலோ நீ ஒரு தலைமைத்துவத்தில் இல்லாமல் இருக்கலாம் ஆனால் மனசாட்சியுடன் மனமுவந்து அவருடைய ஆளுகைக்கு இணங்குவாயானால், அவருடைய ஆளுகையை உறுதியாக்குவாய். ஜனங்களுக்காக மனதுருக்கத்துடன் மேய்ப்பனுடைய இருதயத்தோடு ஆளுகை செய்கிற தேவனை நாம் பின் பற்ற வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ உனக்கு அவர் செய்தவற்றிற்காவும், அழைத்த அழைப்பிற்காகவும் அவரைத் துதிப்பாயாக.
- ☐ அவருடைய ஆளும் அதிகாரத்திற்கு நீ ஒரு பிரதிநிதி ஆகும் பொருட்டு, உனக்கு தைரியமும் ஆவிக்குரிய முதிர்ச்சியையும் அருளுமாறு தேவனிடம் ஜெபித்துக் கேள்.
- ☐ நீ அவருடைய ஸ்தானாபதியாகவும் அவருடைய ஆளுகையை உறுதிப் படுத்துகிறவனாகவும் காணப்படுவதற்கு, அவர் எந்த பகுதியில் உன்னை ஜீவனம் பண்ண அழைக்கிறார் என்பதை தேவனிடம் ஜெபித்துக் கேள்.
- ☐ ஒரு மேய்ப்பனுடைய இருதயத்திற்காக தேவனிடம் ஜெபித்துக் கேள்.

பிரகடனம்: *தேவனுடைய இராஜ்ஜியம் எனக்குள் இருக்கிறது என்பதைப் பிரகடனம் பண்ணுகிறேன். பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினால் இயேசுவைப் போல உரு மாற்றம் பெற்று ஆளுவதற்கும் அரசாட்சி செய்வதற்கும் தேவன் என்னை இருளிலிருந்து தூக்கி இரட்சித்தார் என்பதை நான் நம்புகிறேன். இராஜாவாகவும் ஆசாரியராகவும் ஜீவிக்க வேண்டிய அழைப்பிலிருந்து நான் பின் வாங்கிப் போனதற்காக மனந்திரும்புகிறேன். எனது வாழ்க்கைக்கும் குடும்பத்திற்கும், திருச்சபைக்கும் தேவ ஆவியினால் எழும்பி ஆவிக்குரிய தலைமைத்துவத்தை வழங்க இராஜாவுக்கு அடிபணிகிறேன்.*

▶ நாள் 10: | 16 ஆகஸ்ட்

# இராஜரீக ஆசாரியத்துவம்

ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். **1 பேதுரு 2: 5**

இயேசு இராஜாவும் ஆசாரியருமாவார். அவரை இராஜாவாகக் கொண்டு ஜனங்களும் இராஜ்ஜியத்தின் ஆசாரியர்களாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய வாஞ்சையாய் இருக்கிறது. ஒரு இராஜா தமக்கு கீழானவர்களை ஆளுகை செய்கிறதைப் பற்றிப் பேசுவார், ஓர் ஆசாரியர் தேவனுக்கு ஆராதனை செய்து அவருக்கு ஊழியம் செய்வார். மத்தேயு 2:1-2ல் வான சாஸ்திரிகள் தொழுது கொள்ள வருகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் எருசலேமிலிருந்து வரவில்லை. அவர்களுக்கு இராஜ்ஜியத்தின் இருதயம் இருந்தது. அவர்கள் தங்களுக்குள் இராஜாவாக இருப்பினும், இயேசு எனும் இராஜாவுக்கு சரணடைந்து தொழுது கொள்ள வந்தனர். தங்கள் சொந்த வட்டத்திற்குள்ளான ஆளுமையை சிந்திப்பதை விட இப்புவியில் மாற்றம் காண வேண்டும் என ஒப்புக்கொடுத்தவர்கள். அவர்களை விட மேன்மையான இராஜாவை அவர்கள் தொழுது கொள்ள வந்தனர். அவர்கள் நட்சத்திரத்தைக் கண்டு தொழுகையின் இடத்திற்கு வந்தனர்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ உன்னை மாற்றும்படி தேவனிடம் கேள். வெளிப்புறமானதைக் காண அல்ல (நட்சத்திரம்) ஆனால் ஆவியில் உண்மையாக ஆராதிப்பவராக.
- ☐ வசதிக்கு ஏற்ப இராஜாவை ஆராதிப்பதிலிருந்தும் தேவைப்படும் போது ஊழியம் செய்கிற இருதயத்திலிருந்து மனந்திரும்பு.
- ☐ அவரை சேவிக்கிற வேளையில் தேவன் எதை வாஞ்சிக்கிறார் என்பதை கேட்கும்படி உன் ஆவிக்குரிய செவியைத் தேவன் திறக்க அவரிடம் ஜெபித்துக் கேள்.

பிரகடனம்: *தேவனுடைய இராஜ்ஜியம் எனக்குள் இருக்கிறது என்பதைப் பிரகடனம் பண்ணுகிறேன். பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினால் இயேசுவைப் போல உரு மாற்றம் பெற்று ஆளுவதற்கும் அரசாட்சி செய்வதற்கும் தேவன் என்னை இருளிலிருந்து தூக்கி இரட்சித்தார் என்பதை நான் நம்புகிறேன். இராஜாவாகவும் ஆசாரியராகவும் ஜீவிக்க வேண்டிய அழைப்பிலிருந்து நான் பின் வாங்கிப் போனதற்காக மனந்திரும்புகிறேன். எனது வாழ்க்கைக்கும் குடும்பத்திற்கும், திருச்சபைக்கும் தேவ ஆவியினால் எழும்பி ஆவிக்குரிய தலைமைத்துவத்தை வழங்க இராஜாவுக்கு அடிபணிகிறேன்.*

▶ நாள் 11: | 17 ஆகஸ்ட்

# இராஜ்ஜிய வாழ்க்கை முறை

நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது. **யோவான் 5: 30**

இயேசு ஓர் எடுத்துக்காட்டு இராஜ்ஜிய வாழ்க்கை முறையை நாம் பின் பற்றுவதற்கென ஸ்தாபித்தார். பிதாவின் சித்தமே அவரது வாஞ்சையும் தேவ இராஜ்ஜியமே அவரது முன்னுரிமையுமாக இருந்தது. இரண்டாவதாக, இயேசு சொன்ன எதுவுமே அவரது பிதா சொன்னதைக் கேட்டுத் தான். அவர் செய்த யாவுமே அவரது பிதா செய்த பாணி தான். ஹுநானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்ஹூ. வார்த்தையாகிய இயேசு மாம்சமானார். உலகமும் அதே பாணியில் தான் சிருஷ்டிக்கப்பட்டது. தேவனுடைய பேசப்பட்ட வார்த்தை. இயேசு தம்முடைய ஜீவிய முறைமையைத் தம்முடைய பிதாவின் முறைமைக்கு ஒத்த விதத்தில் இணைத்து, முன் மாதிரியாக வெளிப்படுத்தினார்.

மானிடனான அவர் பாவம் இல்லாதவராக இருந்தார். பரிசுத்த ஆவி தம்மை நிரப்பும் பொருட்டு அவர் தம்மைத் தாமே முற்றிலும் வெறுமை ஆக்கினார். தேவனிடத்திலிருந்து புறப்படுகிற வார்த்தையின் மூலம் மனிதன் பிழைக்க வேண்டும். இயேசு தமது ஜீவிய முறைமையை அர்ப்பணம் செய்து பிதாவினுடைய வார்த்தையை கேட்டு, வல்லமையுள்ள வார்த்தையைப் பேசி, அந்த வார்த்தையின் மூலம் தேவ பிரசன்னத்தையும் இராஜ்ஜியத்தையும் விடுவித்தார்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ உன்னுடைய இருதயத்தையும் நாவையும் சுத்திகரிக்கும்படி தேவனிடம் கேட்டு அவருடைய நீதியின் பிரசன்னத்தை கொணருகிற கருவியாக பயன் படுத்தப்பட ஜெபி.
- ☐ பரிசுத்த ஆவி உன்னை வல்லமையால் நிரப்பி இயேசுவையும் அவர் வாழ்ந்து காட்டின மாதிரியையும் பின் பற்றுகிறதாயும் அது பிதாவினுடன் இணைக்கப்பட்டதாக நாளின் ஒவ்வொரு நாழிகையுமாய் இருக்க தேவனிடம் கேட்டு ஜெபி.
- ☐ தேவனுடைய முன்னுரிமைக்கு ஏற்றதாய் உன்னுடையதும் நேராக்கப்பட தேவனிடம் கேட்டு ஜெபி.
- ☐ தேவையுள்ள ஒருவருக்கு, உன் பட்டிணத்திற்கு, அல்லது சமூகத்திற்கு ஒரு வார்த்தையை உன்னிடம் பேச கேட்டு ஜெபி. தேவன் தாமே அந்த சூழ் நிலைக்கு வேண்டிய அபிஷேகத்தை அவிழ்த்து விசுவாசத்தில் அந்த வார்த்தையை ஜெபித்து விடுவி.

பிரகடனம்: *இயேசு சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் உயர்ந்திருக்கிறார் என்று பிரகடனம் செய்கிறேன். இன்னும் அநேக வான சாஸ்திரிகள் நட்சத்திரத்தைக் கண்டு இயேசுவை தொழுது கொள்ளுவதற்கான கிரயத்தை செலுத்துவார்களாக. வானத்தைத் திறந்து இயேசுவுடைய மாட்சிமை, மகிமை, பரிசுத்தம் இந்த மண்ணில் எங்கும் நிறைந்து வெளிப்படட்டும்.*

▶ **நாள் 12:** | 18 ஆகஸ்ட்

# இராஜ்ஜிய வாழ்க்கை முறை

நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது. **யோவான் 5: 30**

இயேசு ஓர் எடுத்துக்காட்டு இராஜ்ஜிய வாழ்க்கை முறையை நாம் பின் பற்றுவதற்கென ஸ்தாபித்தார். பிதாவின் சித்தமே அவரது வாஞ்சையும் தேவ இராஜ்ஜியமே அவரது முன்னுரிமையுமாக இருந்தது. இரண்டாவதாக, இயேசு சொன்ன எதுவுமே அவரது பிதா சொன்னதைக் கேட்டுத் தான். அவர் செய்த யாவுமே அவரது பிதா செய்த பாணி தான். 'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'. வார்த்தையாகிய இயேசு மாம்சமானார். உலகமும் அதே பாணியில் தான் சிருஷ்டிக்கப்பட்டது. தேவனுடைய பேசப்பட்ட வார்த்தை. இயேசு தம்முடைய ஜீவிய முறைமையைத் தம்முடைய பிதாவின் முறைமைக்கு ஒத்த விதத்தில் இணைத்து, முன் மாதிரியாக வெளிப்படுத்தினார். மானிடனான அவர் பாவம் இல்லாதவராக இருந்தார். பரிசுத்த ஆவி தம்மை நிரப்பும் பொருட்டு அவர் தம்மைத் தாமே முற்றிலும் வெறுமை ஆக்கினார். தேவனிடத்திலிருந்து புறப்படுகிற வார்த்தையின் மூலம் மனிதன் பிழைக்க வேண்டும். இயேசு தமது ஜீவிய முறைமையை அர்ப்பணம் செய்து பிதாவினுடைய வார்த்தையை கேட்டு, வல்லமையுள்ள வார்த்தையைப் பேசி, அந்த வார்த்தையின் மூலம் தேவ பிரசன்னத்தையும் இராஜ்ஜியத்தையும் விடுவித்தார்..

## ஜெப குறிப்புகள்:

- ☐ உன்னுடைய இருதயத்தையும் நாவையும் சுத்திகரிக்கும்படி தேவனிடம் கேட்டு அவருடைய நீதியின் பிரசன்னத்தை கொணருகிற கருவியாக பயன் படுத்தப்பட ஜெபி.
- ☐ பரிசுத்த ஆவி உன்னை வல்லமையால் நிரப்பி இயேசுவையும் அவர் வாழ்ந்து காட்டின மாதிரியையும் பின் பற்றுகிறதாயும் அது பிதாவினுடன் இணைக்கப்பட்டதாக நாளின் ஒவ்வொரு நாழிகையுமாய் இருக்க தேவனிடம் கேட்டு ஜெபி.
- ☐ தேவனுடைய முன்னுரிமைக்கு ஏற்றதாய் உன்னுடையதும் நேராக்கப்பட தேவனிடம் கேட்டு ஜெபி.
- ☐ தேவையுள்ள ஒருவருக்கு, உன் பட்டிணத்திற்கு, அல்லது சமூகத்திற்கு ஒரு வார்த்தையை உன்னிடம் பேச கேட்டு ஜெபி. தேவன் தாமே அந்த சூழ் நிலைக்கு வேண்டிய அபிஷேகத்தை அவிழ்த்து விசுவாசத்தில் அந்த வார்த்தையை ஜெபித்து விடுவி.

பிரகடனம்: *தேவ இராஜ்ஜியம் எனக்குள் இருக்கிறது என பிரகடனம் செய்கிறேன். எனது வாழ்க்கையில் காணப்படும் நடக்கவே முடியாத அல்லது போராட்டத்தையும் பயத்தையும் மேற்கொள்ள சமாதானத்தையும் விசுவாசத்தையும் நான் அறிவிக்கிறேன். நான் சுருங்கிப் போகாமல் தேவ வார்த்தையை கேட்பதற்கு முன்னே செல்லுவேன். அவர் என்ன என் வாழ்க்கையில் செய்கிறார் என்பதைக் கண்டறிய என் இருதயத்தை திருப்புவேன். என்னுடைய இலக்கை அடைவதற்கு அல்ல ஆனால் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு. அவர் என்னை என்ன செய்யச் சொல்கிறாரோ, எப்படி வழி நடத்த விரும்புகிறாரோ அப்படியே அதற்கு ஒப்புக் கொடுக்க அர்ப்பணிக்கிறேன்.*

▶ நாள் 13: | 19 ஆகஸ்ட்

# குடும்ப நலன் முக்கியத்துவம்

நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். **ஆதியாகமம் 18: 18-19**

அவரில் நமது விசுவாசம் தொடர்ந்து காணப்படவும், இம் மண்ணில் இருக்கிற வரையில் அவரது புகழை மணக்கச் செய்கிறதும் தான் குடும்பத்திற்கான தேவனுடைய மகத்தான திட்டமாய் இருக்கிறது. அவரில் விசுவாசம் நாட்டப்படுவதற்கு அதுவே முதன்மையான ஸ்தலமாக இருக்கிறது.

திருச்சபைத் தலைவர்களாக உருவாக்கப்படுகிற இடமாகவும் குடும்பம் காணப்படுகிறது. **(1 தீமோத்தேயு 3: 2-5)**.

உலக ரீதியில் குடும்ப கணக்கெடுப்பின் புள்ளி விவரப்படி, குடும்பங்களை நாசம் பண்ணுகிறதின் மூலம் சபைகளைப் பாழாக்குகிறதில் சாத்தான் ஜெயம் கண்டு வருகிறான் எனப் பார்க்கிறோம். தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்கிறதில் தேவன் ஏற்படுத்திய இரண்டு ஸ்தாபனங்கள் திருச்சபையும் குடும்பமும் ஆகும். பெருகிக் கொண்டே போகும் குடும்ப விரிசல்களை எதிர் நோக்கி இருக்கும் மலேசிய திருச்சபைகள் உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் திறம்பட வெளிக்காட்டும் அதின் ஊழியம் எது வரைக்கும் தாக்குப் பிடிக்கும்?

## ஜெப குறிப்புகள்:

- ☐ திருச்சபைகளில் ஆரோக்கியமான குடும்பங்களை கண்டு பிடித்து அவர்களை பாராட்டும் பணியை திருச்சபைகளின் தலைமைத்துவம் செய்யத் துவங்க வேண்டும்.
- ☐ கூட்டு குடும்ப வாழ்க்கையில் வலிமையான குடும்பத்தைக் அவர்கள் கட்ட முன்னுரிமை வழங்கும்படி ஜெபியுங்கள்.
- ☐ எல்லா வயது நிலையில் இல்ல வாழ்க்கையில் இருக்கும் அனைத்து தரப்பினரையும் தேறினவர்களாகக் காணப்படும் பொருட்டு அவர்களில் திருச்சபை போதுமான அளவு முதலீடு செய்ய வேண்டும்.
- ☐ கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கை முறைமை மூலம் சமுதாயத்தில் தாக்கம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு சபையார் உப்பாகவும் ஒளியாகவும் விளங்கும் பொருட்டு, தலைமைத்துமும், சபையாரும் ஓர் இலக்குடன் தங்கள் நோக்கங்களை அவர்கள் குடும்ப மேம்பாட்டில் புகுத்த வேணடும்.

▶ நாள் 14: | 20 ஆகஸ்ட்

# சபையும் இல்ல பங்காளரும்

இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது.. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக. **உபாகமம் 6: 4-9**

மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும். **எபேசியர் 4: 11-12**.

தங்கள் குடும்பத்தை வழிநடத்துகிற முதன்மையான பங்கினை பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் தெளிவாக எடுத்துரைக்கின்றன. தெய்வீக வாழ்க்கையை வாழுவதற்கு மாத்திரம் கிறிஸ்தவ குடும்பங்கள் அழைக்கப்படவில்லை. (உறுதியான திருமண பந்தம், பயனுள்ள பெற்றோர் வளர்ப்பு, விசுவாசத்தை பின் வரும் சந்ததி தொடரச் செய்தல், வயோதிகரை பராமரித்தல் போன்றவை) மாறாக சமுதாயத்தின் மத்தியில் வாழுகிற அவர்கள் குறிப்பிட்ட விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிற முகவர்களாக காணப்பட வேண்டும்.

இதனை குடும்பங்கள் தனிப்பட்ட ரீதியில் செய்ய இயலாது. மேலும் இந்த பயணத்தை ஒற்றையாய் நடத்துவதற்கு தேவனும் திட்டமிடவில்லை. ஒவ்வொரு மனிதனும் தத்தம் குடும்பத்தை நடத்த பணிக்கப்பட்டிருந்தாலும், (எபேசியர் 5: 23, 25-29 & 6: 4), எவரும் நடத்துவதற்கும் தேவைப்படுகிற அனைத்தையும் செய்யும்படிக்கும் தாலந்துகள் பெறவில்லை. அங்கே தான் கிறிஸ்துவின் சரீரம் இடம் பெறுகிறது. தேவன் நியமித்த நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, திருச்சபை இக்குடும்பங்களை தாங்கும்படி அதற்கு ஓர் உத்தரவு அருளப்பட்டிருக்கிறது. அநேக வருடங்களாய்க் குடும்பங்களுக்கு திருச்சபை சார்ந்த ஸ்தாபனங்கள், ஊழியங்கள் வழி நிலமாகிய மனத்தை பண்படுத்தி வந்தாலும் சிக்கல்களை எதிர்கொள்ளும்பொழுது எதிர்ப்பாய்த் தான் சமாளிக்க முனைகிறார்கள். நல்ல மேம்பாடடைந்த ஆரோக்கியமான குடும்பங்களைத் திருச்சபைகள் உருவாக்குவதற்கு, நீண்ட பார்வையுடன் முறையாக திட்டங்களை வகுத்து செயல் படுத்த வேண்டும்.

## ஜெப குறிப்புகள்:

- ☐ தெய்வீக நியமனத்துடன் தாங்கள் தம் குடும்பத்தை வழிநடத்துவதற்கு உத்தரவாதம் பெற்றவர்கள் என பெற்றோர்கள் அடையாளங்காண.
- ☐ குடும்பத்தலைவர்கள் தங்கள் குறிக்கோள்களை அடைய வேண்டி, திருச்சபையானது (தலைவர்களும் சபையாரும்) அவர்களை ஆதரிக்கிற பொறுப்பினை உணர்ந்தவர்களாய் அறியவும் ஏற்றுக்கொள்ளவும்.
- ☐ தேவன் நியமித்த நோக்கங்களை குடும்பங்கள் நிறைவேற்றும்படி, திருச்சபைகள் நீண்ட பார்வையுடன் கூடிய முறையான திட்டங்களை வகுக்கும்படி.
- ☐ தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற விதத்தில் எதிர்கால சந்ததி எழும்பும் பொருட்டு, முறையான பங்காளித்துவம் காணப்பட.
- ☐ ஒருவருக்கொருவர் குடும்பமாய் ஊழியங்களை ஆதரவு கொடுக்கும் படி ஸ்தல சபைகள் ஒரு இணைப்பை ஏற்படுத்த.

▶ நாள் 15: | 21 ஆகஸ்ட்

# குடும்ப தலைமைத்துவ சிக்கல்

கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான். **யோசுவா 24: 15**

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். **எபேசியர் 5: 23.**

தலைமைத்துவம் என்பது திசையும் செல்வாக்கும் ஆகும். இயற்கையாகவே தேவன் விரும்புகிறபடி குடும்பங்கள் ஆகுவதில்லை. யாராவது ஒருவர் விசேஷ திட்டங்களுடன் அவற்றை இசைத்து வெளிக்கொணர வேண்டியிருக்கிறது. தேவன் யோசுவாவுக்கு வைத்த முதன்மையான அழைப்பு என்னவெனில் தன் வீட்டாருக்கு ஆவிக்குரிய தலைமைத்துவம் அளிக்கும் படியாகத்தான். அவன் தன் குடும்பத்தின் தலைவனாயிருந்து குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வெப்பமானியாக செயல்படுகிறான். போதுமான அளவிற்கு திருச்சபை தம் விசுவாசிகளுக்கு முக்கியத்துவத்தின் வலியுறுத்தல் கொடுக்காமற் போனால், அவர்கள் தங்கள் ஆவிக்குரிய வளைர்ச்சியின் முகாமையை பின்னுக்குத் தள்ளி, வாரந்தோறும் நடக்கிற குழும கூட்டங்களுக்கு செல்வது போல செல்லத் துவங்குவார்கள். பிள்ளைகளுடைய ஆவிக்குரிய மேம்பாட்டுக்கு, திருச்சபை தலைமைத்துவம் பெரும்பாலும் அவர்களின் பெற்றோர்களுடன் போராட்டம் நடத்த வேண்டியதாய் இருக்கிறது. உதவியாளராக விளங்குகிற தாயும் தன் கணவனோடு இணைந்து அவருடைய தலைமைத்துவத்திற்கு ஒத்துழைக்க வேண்டிய அவசியம் உண்டு. ஆனாலும், தகப்பன் ஸ்தானத்தில் உள்ளவர் தேவைப்படும் ஆலோசனைகள் தன் வீட்டிற்கான சரியான தலைமைத்துவத்தை நல்க வேண்டியுள்ளதாய் இருக்கிறது. தகப்பன் இல்லாத வீடுகள், கிறிஸ்தவ இல்லங்களாய் நிலைத்திருக்கும் பொருட்டு கடுமையான மிரட்டலுக்குள் கடந்து செல்லும். இப்படி தகப்பன் இல்லாத வீடுகளில் அநேக தாய்மார்களே தங்கள் குடும்பங்களுக்கு தலைவர்களாக செயல் படும் நிர்ப்பந்தத்தில் உள்ளனர்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ சபை வாழ்க்கையில், இல்ல தலைமைத்துவம் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் நல்கப்பட.
- ☐ தெய்வீக இல்லத்தை எழுப்ப பயனுள்ள தலைமைத்துவ பயிற்சி கொடுக்கப்பட.
- ☐ தங்கள் இல்லங்களில் தகப்பன் ஸ்தான தலைமைத்துவத்தை சரியானபடி எடுக்க தகப்பன் ஸ்தான எழுப்புதலின் இருதயம் கிறிஸ்தவ தகப்பன்மார்கள் மத்தியில் எழும்ப.
- ☐ ஒவ்வொரு கிறிஸ்தவ இல்லங்களிலும் வேதாகம நோக்கங்களுடைய புரிந்துணர்வும், ஏற்றுக் கொள்ளலும், சரியான திசையில் செல்லுகிற வழிகாட்டியும் காணப்பட.

▶ நாள் 16: | 22 ஆகஸ்ட்

# வழி வந்த விசுவாசம்

என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்.. அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம்; எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள்.. பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்.. அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்.. இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்;. தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும்படிக்கும்; **சங்கீதம் 78: 2-7**

அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன். **2 தீமோத்தேயு 1: 5**

ஒரு சந்ததியிலிருந்து மறு சந்ததிக்கு விசுவாசத்தைத் தொடரச் செய்வதற்கு தேவன் பயன் படுத்துகிற பிரதானமான வழிமுறை குடும்பமாகும். நம்முடைய இருதயமும் பிள்ளைகளுடைய இருதயமும் வல்லமையாக வடிவமைக்கப் பட்டு தேவனுக்கென்று ஓர் ஆழமான உறவை இணைப்பதற்கு சமானம். இதன் காரணமாகவே பெற்றோர்களுக்கு (தாத்தா பாட்டிமார்களுக்கும்) பிள்ளைகளின் இருதயத்தை ஊட்டி வளர்ப்பதற்குரிய அளப்பரிய வல்லமையை தேவன் அருளியுள்ளார்.

அவர்களுடைய இருதயத்தின் போராட்டமானது மிகவும் முனைப்பானது. ஊடகங்கள் வழி உத்வேகம் அளிக்கும்படி, உலக பொருளாதார அடைவு, வாங்கும் சக்தி, 'நான் தான் முதலில்' எனும் சுய இன்பம் போன்ற கலாச்சாரங்கள் நம் பிள்ளைகளை தேவனிடத்திலிருந்து பிரிக்கச் செய்கிற சாத்தானின் யுக்திகளாகும். ஆவிக்குரிய எதிர்ப்பு சூழ்நிலையில் ஜீவிக்கிற பெற்றோர்களாகிய நாம் தான், நோக்கத்தோடும், உருக்கத்தோடும் ஊக்கத்தோடும் துல்லியமான சுவடுகளுடனும் பிள்ளைகள் நம் இல்லங்களில் இருக்கும் போதே தேவனை அறிந்து கொள்ளவும், அவரை நேசிக்கவும் ஊட்டி கற்று வளர்க்க வேண்டும்.

குழும சபை நடவடிக்கைகளில், பிள்ளைகள் மற்றும் வாலிபர் குழுக்கள் தங்களுடைய நிகழ்வுகளின் வழி தங்கள் பங்கை ஆற்றினாலும், இந்த போராட்டத்தை ஜெயிப்பதற்கு இவைகளைச் சார்ந்திருந்தால் மாத்திரம் போதாது. இங்குதான் திருச்சபை இடைபட்டு இப்பெற்றோர்களுக்கு ஒத்தாசையாக இந்த மிக ஆபத்தான பணியை செய்து முடிப்பதற்காக அவர்களை தேறினவர்களாக மாற்றுவதற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ தங்கள் பிள்ளைகளுடைய ஆவிக்குரிய மேம்பாட்டிற்கு, பிரதான முக்கியத்துவத்தை நல்க கிறிஸ்தவ பெற்றோர்கள் ஒப்புக்கொடுக்க வேண்டும்.
- ☐ பலனுள்ள விதத்தில் விசுவாசத்தை தொடரச் செய்வதற்கு எந்தவிதமாய் ஞானமும் உற்சாகமும் அவசியம் என்பதை பெற்றோர்கள் கற்றுக் கொள்ள.
- ☐ பிள்ளைகளுடைய விசுவாசத்தை ஊட்டி வளர்ப்பதற்கு சபை ஊழியங்கள் பங்காளித்துவப் பொறுப்பைச் செய்ய.
- ☐ பெற்றோர்களுடைய இலட்சியங்கள் நிறைவேற போதுமான அளவு பயிற்சிகள் உட்பட திருச்சபை தன்னை அதற்கு அர்ப்பணம் செய்ய.

▶ நாள் 17: | 23 ஆகஸ்ட்

# குடும்ப அன்பு: திருமணம்

அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா?. இப்படி இருக்கிறபடியால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார். **மத்தேயு 19:4-6**

மலேசியாவில் வேகமாக உயர்ந்து வரும் விவாகரத்து விகிதத்தை பார்க்கும் பொழுது அதிர்ச்சியாய் இருக்கிறது. 2010ஆம் ஆண்டில் மாத்திரம் 33,000 மண முறிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது மிகவும் சிறிய எண்ணிக்கையே. நமது குடும்பங்களில் இன்னும் அதிகமான திருமண சிக்கல்கள் மலிந்து கிடக்கின்றன. அண்மைய காலங்களில், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் கூட கணக்கற்ற விகிதத்தில் திருமண பந்தங்கள் உடைந்து போய்க் கொண்டிருக்கின்றன. திருமண முறிவுகள் உள்ள குடும்பங்கள் தங்கள் விசுவாசத்தை பின் வரும் சந்ததிகளுக்கு தொடர முடியாமல் போய் விடுகிறது. மேலும் தேவனை வெளிப்படுத்துகிற விதத்தில் தெய்வீக வித்துகளை உருவாக்குவதின் தேவ திட்டத்தையே அது தடை செய்கிறதாய் இருக்கிறது. (மல்கியா 2: 15).

கணவன் மனைவி பங்கு மற்றும் பொறுப்புகளில், மாமனார் மாமியார் எடுக்கிற ஸ்தானம், குடும்ப பொருளாதாரம் இன்னும் அநேக இது போன்றவற்றில் அதிகமான குழப்பங்கள் நிலவுகின்றன. திருச்சபைகளில் திருமண இறைப் போதனை இன்னும் வலிமையாக வேண்டும். மேலும் தேவ அசல் திட்டத்தில் உருவாக்கப்பட்ட, ஒருவனுக்கு ஒருத்தி எனும் ஆண் பெண் திருமண ஒழுங்கை மாற்றி அமைத்து சொந்த பாணியில் திருமண உறவுகளை ஏற்படுத்தும் கொடூரமான முயற்சிகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

மலேசிய திருச்சபைகளில், கிறிஸ்தவ திருமணங்கள் உயர்ந்த ஒரு மரியாதையுடன் நடத்தப் படவில்லை என்றால் நமது கலாச்சாரத்துக்குள் ஒரு பூரணமான விளைச்சலை அது உறுதிப் படுத்தாது. திருச்சபைக்கு ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டை காண்பிக்கிற சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதாவது இறையியல் உறுதியில், திருமணங்களின் தெளிவுரைக்கும் பாதுகாப்பிற்கும் ஒரு சிறந்த நிலையில் சமுதாயத்தில் முன்மாதிரியாய் விளங்கும் ஸ்தானத்தில் திருச்சபை வைக்கப்பட்டிருக்கிறது. திருச்சபை இந்த பலமான இறையியல் போதனையை பலிபீடத்திலிருந்து அல்லது அதே போன்ற குழும ஸ்தாபனத்தின் வழி போதிக்க வேண்டும்.

## ஜெப குறிப்புகள்:

- ☐ திருச்சபை, கிறிஸ்தவ திருமணங்களைப் போற்றி, கனம் பண்ணி, கொண்டாடி, பாதுகாத்து, அவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
- ☐ திருச்சபையானது, திருமண இறையியல் போதனைகளை வலியுறுத்தி, ஆரோக்கியமான திருமணங்கள் சபைகளிலும், சமுதாயத்திலும் உயர்த்தும்படியான தரிசனத்தைத் தழுவிக் கொள்ள வேண்டும்.
- ☐ திருமண தம்பதியர், தங்கள் விவாக பந்தம் ஆரோக்கியமானதாக இருப்பதற்கான பொறுப்பை தாங்களே ஏற்று, அது உறுதியானதாய்க் காத்துக் கொள்ள ஒப்புக் கொடுக்க வேண்டும்.

▶ **நாள் 18:** | **24 ஆகஸ்ட்**

# குடும்ப அன்பு: பெற்றோர் வளர்ப்பு

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்,. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.
**எபேசியர் 6: 1-4**

தேவனுக்காக தங்கள் பிள்ளைகளுடைய இருதயங்களை ஊட்டி வளர்த்து வருவதற்கு, தேவன் கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு முதன்மையான பொறுப்பு, வல்லமை, அன்பு, மற்றும் வீட்டு சூழலை தந்திருக்கிறார் என்பது, பிழையின்றி தெளிவாகிறது. அவர்கள் துவக்கத்தில் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்கிறதைக் கண்டு பின்னர் அவர்களது உண்மைத்துவத்தின் படி நியாயம் தீர்க்கப் படுகிறார்கள். பல்வேறு நவீன தாக்கங்களினால் அலசடி படுகிற பிள்ளைகளை சபை பராமரித்துக் கொள்ளும் என்று எண்ணி சபையை சார்ந்து இருப்பதினால், தங்கள் சார்பில் சபை ஆவிக்குரிய வளர்த்தியில் பிள்ளைகளை கவனித்துக் கொள்ளும் எனும் பட்சத்தில் அச்சம் ஊட்டக்கூடிய விளைவுகளை அவர்கள் பின்னர் சந்திப்பர். பிள்ளைகளுடைய விசுவாச மேம்பாட்டில் பெற்றோர்களை விட வேறு யாரும் நிகராக இருக்க முடியாது.

அவசியப்படுகிற இடத்தில் பெற்றோர்கள் இல்லாது போகிற போது இந்த நவீன காலத்தில் பெற்றோர் வளர்ப்பு பிரச்சினையானது மோசமான சிக்கலாக ஆகிறது. அநேக பிள்ளைகள் குறிப்பாக பதின்ம வயதினர் தாங்கள் கைவிடப் பட்டதாகவே கருதுகின்றனர். இது சமூக - உணர்ச்சி ஆரோக்கியத்திற்கும், எளிதாய் விசுவாச மேம்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கும் கேடு விளைவிக்கிறதாகும்.

தங்கள் பிள்ளைகளுடைய தனித் தன்மைக்கு அதிக சுதந்திரம் கொடுத்தும், அவர்களை தற்காத்துப் பேசியும், செல்லம் கொடுத்தும் வளர்க்கிற ஒரு முறைமை தொடரும் பொழுது தங்கள் பெற்றோருக்கு கொடுக்கும் கனத்தையும், மரியாதையையும் குறைக்கச் செய்கிறது. பிள்ளைகள் தங்கள் வயது சென்ற பெற்றோர்களைப் பராமரிக்கிற கலாச்சாரமும் பலவீனமாகிக் கொண்டு வருகிறது. சரித்திரத்திலேயே திருச்சபை முதன் முறையாக வயது சென்றோரை பராமரிக்கிற சிக்கலை சபை விசுவாசிகள் மத்தியில் எதிர் நோக்குகிறது.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ பிள்ளைகளுடைய மேம்பாட்டிலும் அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் முதன்மையான அறிவுரையாளராகும் பொறுப்பினையும் எடுத்துக் கொள்ள.
- ☐ பெற்றோர்களே கிறிஸ்துவின் சீடராக வளர்ந்து, தங்கள் பிள்ளைகளுடைய சீஷத்துவ வளர்த்தியில் தேறினவர்களாக மாறி, அவர்களை நடத்துபவர்களாக மாற.
- ☐ பிள்ளைகளுடைய முறையான மேம்பாட்டு செயலாக்கத்திற்கும், பலன் கொண்டு வரும் முன் அமைப்பு நிகழ்வுகள் மற்றும் ஆள்பலம் மூலம் அவர்களை ஆதரிக்கவும்.
- ☐ பிள்ளைகள் தங்கள் வயது சென்ற பெற்றோரை தங்கள் வாழ்நாள் முழுதும் பராமரிக்கும்படி.

▶ நாள் 19: | 25 ஆகஸ்ட்

# குடும்ப கேடகம்

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். **எபேசியர் 6: 11**

எபேசியர் 5: 21-33 பகுதியின் ஒழுங்கு அமைப்பும், (குடும்ப உறவுகளில்) எபேசியர் 6: 10-20 பகுதியின் அமைப்பும் (ஆவிக்குரிய யுத்தம்) , குடும்பம் யுத்தம் ஆகிய இருமருங்கிலும் ஒன்றிணைந்த ஆவிக்குரிய ரீதியில் போரிடுகிற தன்மையை வெளிப்படுத்துகின்றன. குடும்பம் என்பது மனிதர்கள் ஸ்தாபனம் அல்ல ஆனால் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறதான பிரதான நோக்கங்களைக் கொண்டிருக்கிற தெய்வீக ஸ்தாபனமாய் இருக்கிறது. இதினால் தான் குடும்பங்கள் தாக்குதல்களுக்கு முக்கிய இலக்காய் காணப்படுகிறது. இவ்வித தாக்குதல்கள் ஒரு குடும்பம் உருவானவுடனே (ஆதியாகமம்) உடனடியாக துவங்குகிறது. அது விடாமல் தொடருகிறது.

இப்பொழுது இடம்பெறுகிற அனைத்துலக பிரச்சினைகள் ஏதோ நடைமுறையில் எப்போதும் போல இடம் பெறுகிறது என சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல், ஏற்ற விதத்திலான ஆவிக்குரிய வியூகங்களைக் கையாள வேண்டும். பாலுறவு போராட்டங்கள் போலவே இந்த யுத்தங்கள் சிந்தையிலும், உணர்ச்சிகளிலும் வெளிப்படுகின்றன. இவற்றை நாம் சபை எனும் அமைப்போடு பங்காளித்துவத்தை ஏற்படுத்தி நம்மை நாமே தயார் செய்து ஒப்புக் கொடுத்தலுடன் மேற்கொள்ள வேண்டியது கட்டாயம்.

இந்த அண்ட சராசர போராட்டங்களில் கிறிஸ்தவ குடும்பங்கள் வெறுமனே, பாதுகாப்பு இன்றி விடப்படுகின்றனர். திருமணம், பெற்றோர் பராமரிப்பு இன்னும் மற்ற குடும்ப விவகாரங்களுக்கென பிரத்தியேகமாக மன்றாட்டு ஜெபத்தை ஏறெடுக்கும் கலாச்சாரம் நடை முறையில் காண்பது அரிதாக இருக்கிறது. கிறிஸ்தவ குடும்பங்களில் ஜெப தூபம் பொதுவாகவே குறைவாய்க் காணப்படுகிறது. குடும்பங்களானது வல்லமை உள்ள தேவ சேனைகளாக அவருடைய நோக்கங்களை நடப்பிக்கிறவர்களாக, அவருடைய இராஜ்ஜியத்தை மேன்மை படுத்துவதில் தங்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் பட்சமாயும் இருந்து ஜெபத்தில் பகிர்கிறவர்களாக இருக்க வேண்டும்.

## ஜெப குறிப்புகள்:

- ☐ கிறிஸ்தவ குடும்பங்கள் ஜெபத்திலும் மன்றாட்டிலும் தங்கள் ஜீவிய முறைமைகளை பின்பற்ற திருச்சபை உரிய கவனத்தை கொடுத்து தாங்க வேண்டும்.
- ☐ குடும்பத்திற்கு ஆசாரிய பங்கினை ஆற்ற இல்ல தலைமைத்துவம் வலிமையானதாக ஸ்தாபிக்கப்பட வேண்டும்.
- ☐ குடும்ப தொழுகையிலும், மற்ற வழிகளிலும் குடும்பங்கள் ஜெப தூப ஊழியத்தை பயிர் செய்ய வேண்டும்.
- ☐ குடும்பங்களில் தொழுகை ஆராதனையை நடை முறைபடுத்த சபைகள் விசுவாசிகளின் வீடுகளில் ஊக்கமூட்டும் முதலீட்டை செய்ய வேண்டும்.

▶ **நாள் 20: | 26 ஆகஸ்ட்**

# எழுப்புதல்

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?
**சங்கீதம் 85: 6**

திருச்சபையை நீ பார்க்கும் பொழுது, உன்னுடைய அபய அழுகுரல் என்னவாக இருக்கும். அநேகர் ஒரே கதறலைத் தான் கொண்டிருப்பர். 'ஆண்டவரே எங்களை எழும்பச் செய்யும்.^ என்பது தான் அது. ^ஆண்டவர் தான் தேவன்'. ஆனால் அவர் வெகு காலத்திற்கு முன்னதாகவே நாம் வாழுகிற முறைமையிலும், செயல் நடவடிக்கைகளிலும் ஒரு அமைப்பிற்குள் அடைக்கப்பட்டிருப்பார். திருச்சபை தான் தேசத்தின் நம்பிக்கை. இயேசுவின் இரண்டாம் வருகைக்குள் உருமாற்றம் பெற்று, உத்வேகத்துடன் முழுமையாய் சீர் செய்யப்பட்ட அவருடைய இராஜ்ஜியத்தை பறை சாற்றி அவருடைய மகிமையை வெளிப்படுத்துகிறதாக மாற வேண்டும். நமது இருதயத்தையும் சிந்தையையும் நமக்குள் இருக்கிற அவருடைய இராஜ்ஜியத்தில் ஆழமான புரிந்துணர்வுக்குள் வரிசைப்படுத்தாமல் போனால், பரிசுத்த ஆவி நம்முள் பிரவேசித்து நம்மை தலை கீழாக மாற்றி அமைக்கும்படி நம் இருதயத்தையும் ஜீவியத்தையும் அனுமதிக்காமல் போனால் தேவனுடைய உருமாற்றும் வல்லமை நமது குடும்பங்களையும், சமூகத்தையும், பட்டிணத்தையும் நகரத்தையும் விஜயம் செய்யாமல் போகும். பரிசுத்த ஆவியின் வழி நடத்துலும், வல்லமையும் இல்லாமல் போனால், நமது பணியின் ஈடுபாடு அர்த்தமின்றியும் பலனின்றியும் போய் விடும். நமது ஜெபங்களை ஒருமிக்க வைத்து நமது ஆவிக்குரிய வெறுமையை அறிக்கை செய்வோம். அவரது தெய்வீக இடை படுதலுக்கும், எழுப்புதலுக்கும் வேண்டி அவரது அபரிதமான பரிசுத்த ஆவியின் ஊற்றுதலுக்கும் நாம் தவித்து இருப்போம்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ அவருடைய இராஜ்ஜியத்தின் வல்லமை அவருடைய திருச்சபையின் மீது ஊடுருவி, நம்மை உள்ளிருந்து வெளிப்புறமாக மாற்றியமைக்க.
- ☐ வஞ்சகம், சுயதிருப்தி, தன்னிறைவு, ஒத்த வேஷம், மதக் கொள்கை, சுயாதீனம், அசுசி, கருத்து வேறுபாடு, உணர்வின்மை ஆகியவற்றிலிருந்து விடுதலையாகும்படி ஜெபி. அவருடைய பிரசன்னத்தினால் ஆழமான ஒரு வாழ்க்கை முறைமை அடைந்து புரட்சி நிலை ஏற்பட.
- ☐ ஆழமான மற்றும் உண்மையான மனந்திரும்புதல் அவருடைய திருச்சபையில் கடந்து செல்வதின் வழி அவருடைய பிரசன்னத்திற்கும், வார்த்தைக்கும் தாகிக்கும் படி.
- ☐ ஆழமான நெருக்கம், நமது முதல் அன்பு, தேவ பயம் நிலை நிறுத்தப்பட ஜெபி.

▶ நாள் 21: | 27 ஆகஸ்ட்

# ஆவிக்குரிய தலைவர்கள்

உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். **1 பேதுரு 5: 2-5**

தேசிய மற்றும் உலகளவில், திருச்சபை ஒரு தலைமைத்துவ நெருக்கடியை சந்தித்து வருகிறது. சபை விரைவாக வளர்ந்து வருகிறது என்றாலும், சீஷத்துவ தலைவர்கள் இல்லாததால் திருச்சபை ஆழமற்ற மற்றும் பலவீனமான நிலையில் உள்ளது. காரணம் ஜீவியங்களை கட்டுவதற்குப் பதிலாக நமது வாழ்க்கையை நாம் அறிவு, திறமை மற்றும் தொழில் நுட்பங்களைக் கொண்டு சுய உந்துதலில் ஆன தலைமைத்துவ திட்டங்கள் போன்றவற்றை மையமாக வைத்து செயல் படுகிறோம். தெய்வீகத் தன்மை மற்றும் கணக்கு ஒப்புவிக்கும் பொறுப்பு புறக்கணிக்கப்படுகிறது. இதன் விளைவாக, நம் தலைவர்கள் உலக வழிகளில் திருச்சபையை வழிநடத்தவும் ஊழியங்களில் தங்கள் பெருமையை நிலை நாட்டவும், மற்றும் தங்கள் அந்தஸ்தையும் ஸ்தானத்தையும் முக்கியப்படுத்தியும் வருகின்றனர். இதனால் திருச்சபை பாடு படுகிறது.

வேதாகமத்தின்படி நாம் தலைவர்களாக அல்ல ஆனால் சேவகர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் வேதாகம அஸ்திபாரத்திற்குச் சென்று சீஷத்துவத்தை இன்னும் அதிக தீவிரமாக்க வேண்டும். அதனை போதனையின் மூலம், வளர்த்தியின் மூலம், விசுவாசிகளுக்குக் கற்றுக் கொடுப்பதின் மூலம், தேவன் அழைக்கிறவர்களை வேதாகமத்தின் படி தகுதிப் படுத்தி சேவகர் ஊழியத்திற்கு தேறினவர்களாக்குகிறோம். நமது நோக்கமும் செயல்பாடும் இப்பொழுது நாம் உருவாக்குகிற எதிர்கால சந்ததித் தலைவர்களின் தகுதி நிலையை நிர்ணயிக்கும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ நமது தலைவர்களின் நலன்களுக்காகவும் அவர்களது குடும்பங்களுக்காகவும் ஜெபி.
- ☐ நமது தலைவர்களுடைய இருதயங்களிலும் சிந்தைகளிலும் வேறூன்றி இருக்கும் தெய்வீக தன்மையற்ற அமைப்பு மற்றும் அதிகார வர்க்கம் நீங்க ஜெபி.
- ☐ திருச்சபையை வழி நடத்த தலைவர்கள் பயன் படுத்துகிற உலக மற்றும் வேதாகம ஒழுங்கின்படி அல்லாத அனைத்து செயல்பாடுகளும் தவிர்க்கப் பட ஜெபி.
- ☐ கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கிற சீஷத்துவர் சேவகர் தன்மைகளைக் கொண்ட பரிவு மிக்க தலைவர்கள் எழும்ப ஜெபி.
- ☐ அறிவுத் திறனையும் தேர்ச்சி அடைவு நிலைகளையும் வலியுறுத்துகிற அதே வேளையில் வேதாகமக் கல்லூரிகளும், கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் தலைமைத்துவ பயிற்சித் திட்டங்களும், ஜீவியங்களை கட்டுகிறதாக இருக்க ஜெபி.

▶ **நாள் 22:** | **28 ஆகஸ்ட்**

# ஒரு முழுமையான சிந்தை நிலை

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. **ரோமர் 12: 1**

நமது நம்பிக்கைகளையும், நடத்தைகளையும் ஆளுகை செய்வதற்கு, வேதாகமமே ஆதாரம். நமது வாழ்வின் ஒவ்வொரு அங்கமும் கிறிஸ்தவ நடத்தையை சார்ந்திருக்கும் சிந்தை அவசியமானதே. துரதிஷ்டமாக தீங்கான இறையியல், பரிசுத்தமும் - உலகப்பிரகாரமுமான இணைப்பின் ஊடுருவலை சபைக்குள் புகுத்தி, திருச்சபையின் அபிப்பிராயங்களையும் நமது செயலாக்கங்களையும் பாதிக்க வைத்துள்ளன. தேவ மகிமைக்கென எல்லா நிலைகளிலும் தாக்கங்களை ஏற்படுத்தவல்ல விளைவுகளை தடுத்து திருச்சபையை பலவீனப்படுத்தி விட்டது. ஆவிக்குரிய மத நடவடிக்கைகள் தேவனுக்குரியது என்றும், மற்ற நடவடிக்கைகள் அனைத்தும் உலகத்துக்குரியது என்றும் இரு மன சிந்தை நமக்கு கற்றுக்கொடுக்கிறது. இத்தகைய சிந்தை நிலை, சந்தை வெளியில் அவர்களுடைய பணியானது ஆவிக்குரிய விளைவைத் தராது எனும் ஒரு நம்பிக்கையை சார்ந்திருக்கச் செய்யும். இப்படி வேதம் கற்றுக் கொடுக்கவில்லை.

இருக்கிற மற்றும் எதிர்கால சந்ததியின் மனப்போக்கை மாற்றியும், தரிசனத்தால் அவர்கள் நிரம்பப் பண்ணுகிற ஒரு மாற்றத்திற்குள் திருச்சபை வரவும் வேண்டியது அத்தியாவசியமானது. அவர்கள் பணிபுரிகிற இடங்களில் உப்பாகவும் ஒளியாகவும் விளைவுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தி, முழுமையான செயல் பாட்டுடன் இயங்க வைப்பது உள்ளார்ந்த வேதாகம அஸ்திபாரம்தான் என்று நம்ப வைப்பதும் அவசியமே.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ கிறிஸ்துவின் சரீரத்தில் வேதாகம சத்தியங்கள் நிலை நிறுத்தப்பட; கிறிஸ்தவர்கள் முழுமையான சிந்தையுடன் கண்டு செயல்படவும், ஒவ்வொரு இரு மனமுள்ள அடைக்கப்பட்ட சிந்தை நிலையை அகற்றிவிட வேண்டி ஜெபி.
- ☐ முழு ஜீவிய சீஷத்துவத்திற்குள் விசுவாசிகள் பயிற்றுவிக்கப்பட வேண்டியும், வேதாகம சத்தியத்தின்படி ஜீவித்து, யோசித்து, செயல்பட்டு, பேசவும் மற்றும் உலகப் பார்வையிலுள்ள தற்கால விவகாரங்களையும் சமுதாயத்தையும் ஈடுபடுத்திட திருச்சபைகள் தாமே தீவிர முயற்சிகளை எடுக்க ஜெபி
- ☐ விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தின் வழியும், சாட்சிகள் மூலமாகவும், காணப்படாத இராஜ்ஜியம் காணப்படும்படி ஜெபி.

▶ நாள் 23: | 29 ஆகஸ்ட்

# தேசத்தை சீஷமயமாக்குதல்

அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. . ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.
**மத்தேயு 28: 18-20**

மேற்சொன்ன வசனத்திலே 'சகல ஜாதிகளையும் சீஷராக்கி, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்' என்று இயேசு கட்டளையிட்டார். துரதிஷ்டவசமாக அவருடைய கட்டளையை குறைத்து, நிறைவாக மதமாற்றம் செய்தோம்; சீஷர்களை உருவாக்காமல் போனோம். நாம் தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை மறந்து, இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கித்துள்ளோம். அதின் விளைவாக அநேக திருச்சபைகள் எண்ணிக்கையில் வளர்ந்துள்ளனர் ஆனால் தேசத்தை அசைக்கவும் வடிவமைக்கவும் முடியாமல் போய் பலவீனமாகிப் போனோம்.

தேவனுக்குக் கீழாக இந்த தேசத்தை சீஷர் மயமாக்குகிற ஒரு மகத்துவ பணியையும் உருமாற்றத்தின் பிரதான முகவராகவும் திருச்சபை பணியாற்றுகிறது. தேவ இராஜ்ஜியத்திற்கு கீழாக கொண்டு வரும்படிக்கு, இக்காலத்து இராஜ்ஜியத்தை ஆளுகை செய்யவும் அரசாளவும், ஆசாரிய மற்றும் இராஜாக்களின் இராஜாங்கமாக உள்ளோம். உண்மையாகப் பார்க்கப் போனால், அந்த பணியை விட்டு மிகவும் தூரமாக உள்ளோம். நாம் அவசியமாக அவருடைய கட்டளையை செவிமடுத்து அவருடைய அடிப்படை அறைகூவலுக்கு உடனடியாகத் திரும்ப வேண்டியவர்களாக இருந்து நமது விசுவாசிகளை போதனையிலும் வேதாகம சத்தியத்திலும் நிறப்பி எல்லா நிலைகளிலுள்ள சமூகத்தில் ஜீவனம் செய்யும்படி மாற்ற வேண்டும். நமது திருச்சபை, தங்கள் விசுவாசிகளை உப்பாகவும் ஒளியாகவும் எல்லா நிலைகளிலும் உருவாக்காமல் போனால், இந்த தேசமும் அதின் கலாச்சாரமும் தேவ ஜனங்களை தங்களுக்கேற்ற வடிவத்தில் உருவாக்கி விடும். இதனை உடனடியாக நாம் மாற்றி அமைக்க வேண்டும்.

## ஜெப குறிப்புகள்:

- ☐ நாம் தவறின காரியத்திற்கு மனந்திரும்புதலின் அறிக்கை செய்வோம். இந்த தேசத்தை நாம் நேசிப்போம்; அது கற்றுக் கொடுப்பதை தவிர்ப்போம். நாம் சவுகரியத்தை விரும்புகிறோம். தேவன் கோருகிற பலியையோ கீழ்ப்படிதலையோ விரும்புகிறதில்லை.
- ☐ அவருடைய இராஜ்ஜியம் வரவும், தொலைந்து போனதை மறுபடியும் திருப்பும்படியும் ஜெபிப்போம். சுவிசேஷகர்களும், போதகர்களும், மூப்பர்களும் வெறும் சுவிசேஷத்தை மாத்திரம் அல்லாது வேதாகம அடிப்படையிலான தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தையும், சீஷத்துவத்தின் கிரயத்தையும் போதிக்கும்படியாக ஜெபி.
- ☐ அவருடைய இராஜ்ஜியம் வரும்படிக்கு ஜெபி. ஆசாரிய இராஜ்ஜியத்தை நேராக்கி ஸ்தாபிக்கவும், வேதாகம சத்தியங்களில் ஆழமாக வேர் கொள்ளவும் சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் ஏற்றதாய் செய்தி காணப்படவும் செய்தல் வேண்டும்.
- ☐ அவருடைய மகிமைக்கென எல்லா நிலைகளிலும் உள்ள கோணல்களை மாற்றியமைக்கும் பொருட்டு மாற்றம் கொண்டு வரும் ஒரு சந்ததிக்காக ஜெபி.
- ☐ ஒவ்வொரு ஸ்தல சபையிலும் சீஷத்துவ மேம்பாடு வலிமையானதாகக் காணப்பட ஜெபி.

▶ **நாள் 24:** | 30 ஆகஸ்ட்

# அவருடைய இராஜ்ஜியத்தை முன்னேற்று

நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப் போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள். **பிலிப்பியர் 1: 27**

மலேசியாவின் 60% கிறிஸ்தவர்கள் சபாவிலும் சரவாக்கிலும் உள்ளனர். கடந்த 20 ஆண்டுகளாக சபாவில் கிறிஸ்வர்கள் எண்ணிக்கையின் வீழ்ச்சியைக் காணும் பொழுது, சபை தனது ஊழிய வியூகத்தையும் தனது மறு திட்டத்தையும் மற்றும் சாதனங்கள், ஆள்பலம் தந்து கிழக்கு மலேசியாவின் திருச்சபைகளுக்கு உதவும் பொருட்டு சீரமைக்கும் பணியில் இறங்க வேண்டியதாக உள்ளது.

தேவன் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை அவருடைய கண்ணோட்டத்தில் நிதானித்து பகுத்தறிவது நலமானதாக இருக்கும். நம் நாட்டில் அதிக பெரும்பான்மையில் கிறிஸ்தவர்கள் கிழக்கு மலேசியாவில் தான் இருப்பதினால், அதைக் குறித்து திருச்சபைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அழைப்பு என்ன? ஒரு வேளை முழு தேசத்திற்கும் ஆசீர்வாதம் கொண்டு வரும் பொருட்டு தான் அது தீபகற்ப மலேசியாவோடு இணைந்ததோ? இன்றைய நமது சரியான நோக்கமும், செயல்பாடும் தான் எதிர்கால சூழலை நிர்ணயிக்கும். எனவே அவருடைய இராஜ்ஜியத்தை முன்னேற்ற ஒத்துழைக்கும் படி ஒருவருக்கு ஒருவர் பலமாக்கி, நமது நோக்கத்தையும் அழைப்பையும் இந்த தேசத்தைத் தொடவும், ஆசீர்வதிக்கவும் செய்வோம்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ தேசத்தில், வாலாக இராமல், தலையாக இருக்கும் பொருட்டு திருச்சபை விசுவாசத்தில் எழும்பும்படி ஜெபி.
- ☐ தெய்வீகப் பகுத்தறிதலைப் பெற ஜெபி. சமூகங்களில் தாக்கங்கள் ஏற்படுத்தவும், ஆசீர்வதிப்பதற்கும் தேசத்தை சந்திப்பதற்கும், ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன் படுத்திக் கொள்ள ஜெபி.
- ☐ இந்த தேசத்திற்கு தங்கள் பங்கினை ஆற்றவும், அழைப்பை பெற்றுக்கொள்ளவும், சபா மற்றும் சரவாக் திருச்சபைகள் எழும்பும்படி ஜெபி.
- ☐ கிழக்கு மலேசியாவின் விசுவாசிகளுக்கு உதவும்படி அவர்களை தேறப் பண்ணவும், பலமாக்கவும், திருச்சபைகளுக்கு இடையில் பெரிய அளவில் பங்காளித்துவம் மற்றும் வியூக வலைப்பதிவு மற்றும் சாதனங்கள் பரிமாற்றப்பட ஜெபியுங்கள்.

▶ நாள் 25: | 31 ஆகஸ்ட்

# மெர்டேக்கா!

31 ஆகஸ்ட் 1957ல் நமது தேசம் மெர்டேக்கா! மெர்டேக்கா! மெர்டேக்கா! என வெற்றி முழக்கமிட்டது. அந்நிய ஆதிக்கத்திலிருந்து ஒரு புதிய சுதந்திர சரித்திரத்தை படைத்தது. ஆனால் மறைமுகமாக அநேக தேசங்கள் இன்னும் எதிரியின் ஆளுகையில் தான் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. அவனுடைய பொய்மை, சமுதாயத்தின் அஸ்திபாரத்தையும், சடங்குகளையும், கலாச்சாரத்தையும் ஸ்தாபனத்தையும், சமூக அமைப்பு மற்றும் சட்டங்களையே ஊடுருவி சென்றுள்ளது. தேவனுடைய சத்தியம் மாத்திரமே விடுதலையையும், விடுவிப்பையும், சுதந்திரத்தையும், ஷேமத்தையும் நமது தேசத்திற்கு கொண்டு வர முடியும்.

நாம் எழும்பி தேவ இராஜ்ஜியம் நமது உள்ளத்தில் ஆளுகை செய்யும் படிக்கு ஒரு சகாப்தத்தை உண்டாக்குவோம். தேவ சத்தியத்தின் கட்டளையைக் கொண்டு ஒவ்வொரு பிசாசின் அமைப்பையும் தகர்த்துப் போடுவோம். நமது வாழ்க்கையில் குடும்பத்தில், சபையில், தேசத்தில் நிறைவேற்றப் பட வேண்டிய தேவனுடைய அறிவையும் நோக்கங்களையும் குலைச்சல் பண்ணி சீரழிக்கிற அவனுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் முறியடிப்போம். நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி தேவனிடம் ஒரு புதிய ஒப்பந்தத்தில் புதுப்பிப்போம்.

**பிரகடனம்:**

*உமது இராஜ்ஜியத்தின் ஆளுகையையும் அரசாட்சியையும் விரிவாக்கும் ஆணையை ஏற்றுக் கொள்ளுகிறோம். நமது தேசத்திலும் பூமியின் முடிவு பரியந்தமும் அது நிலை நிற்கும். இன்று நமது திருச்சபை உமது இராஜ்ஜியத்தின் நோக்கத்திற்காக உம்மோடு இசைவாகும். இந்த மண்ணிலும், மண்டலத்திலும் உள்ள திருச்சபைகளில் உமது இராஜ்ஜியம் வருவதாக. திருச்சபை செழிப்பாகி உமது நாமத்திற்கு கனமும் மகிமையும் கொண்டு வரும்படிக்கு அதின் எதிரியையும் அதின் ஒவ்வொரு கிரியைகளையும் அழிப்பீராக. உமது மீட்பின் அழைப்பை எங்களுக்கும் எங்கள் மக்கள் குழுக்களுக்கும் வானவில்லின் ஆசீர்வாதமாய் நிறைவேறும் படிக்கு உமது வைராக்கியத்தை பற்றி எரியப் பண்ணுவீராக. எல்லா ஜனங்களும் உம்மை துதிப்பார்களாக*

*உமது சமுதாயத்தின் எல்லா எல்லைகளிலும் உமது இராஜ்ஜியம் வரும்படி ஏற்றுக்கொள்கிறோம். அதாவது: அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம், நீதி, இராணுவம், கல்வி, ஊடகம் மற்றும் கலை ஆகியவை. தெய்வீக ஆண்களையும் பெண்களையும் உயர்ந்த பதவி பொறுப்புகளில் நியமித்து உமது நோக்கங்களை உமது பரலோக நியமத்தின்படி எங்களது தேசத்தில் நிறைவேற்றும் பொருட்டு வரிசைப் படுத்தும். இந்த தேசத்தை ஆளுவதற்கு அதிகாரத்தில் நீர் வைத்த அதிகாரிகளுக்காக நன்றி. நியாயம், அன்பு, தயவு மற்றும் தாழ்மையுடன் பணியாற்றும் படிக்கு அவர்கள் உமது நாமத்திற்கு பயந்து நடப்பார்களாக.*

*எங்களது தேசத்தில் உமது போஷிப்பிற்கும், அளவில்லாத ஆசீர்வாதத்திற்கும் நன்றி. உமது கைகளில் எங்களது பொருளாதாரத்தை வைக்கிறோம். உமது நாமத்தின் நிமித்தம் எங்களை நீதியின் பாதையில் நட த்தும். உமது சித்தத்தையும் பணியையும் செய்து முடிக்க உமது திருச்சபைக்கு சாதனங்களை அருளி ஆசீர்வதியும். உமது சாதனங்களை பொறுப்புடன் உக்கிராணத்துவம் செய்ய உதவி செய்யும். குறைவின் பயத்திலிருந்தும், பேராசையிலிருந்தும் எங்களை விடுவியும்.*

*கட்டுப்பாடற்ற, முரட்டாட்டமுள்ள ஆவியின் பிடியிலிருந்து எங்களை காப்பாற்றும். உம்மாலன்றி நாங்கள் எதுவும் செய்ய இயலாது. முரட்டாட்டமுள்ள பெருமையுள்ள, மாயையான, விக்கிரக பிடி, நெறி தவறுகிற, குரோதமான அபிப்பிராயமுள்ள, ஊழல் மிக்க, அநியாயத்திலிருந்து எங்களை மன்னியும். உப்பாகவும் ஒளியாகவும் இருக்கத் தவறிய சபையாகிய எங்களை மன்னியும். உமது மதகுகளைத் திறந்து மனந்திரும்புதல் மற்றும் ஒப்புரவாக்குதலின் அலையை ஊற்றச் செய்வீராக.*

*தேவரீர், இராஜ்ஜியம் உம்முடையது. உமது நித்திய மகிமைக்கும், நோக்கத்திற்கும் உமது திருச்சபை சீராகும் பொருட்டு உமது வல்லமையை அருளுவீராக. உமது இராஜ்ஜியம் வருவதாக. உமது சித்தம் திருச்சபை மூலமாகவும் திருச்சபைக்கு உள்ளும் இருந்து உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமைக்கும் கனத்திற்கும் செய்யப்படுவதாக.*

▶ **நாள் 26:** | 1 செப்டம்பர்

# அந்தியோகியா திருச்சபை

அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனேகூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள். **அப்போஸ்தலர் 13: 1-3**

அப்போஸ்தலர் புத்தகத்தில் எழுதப்பட்ட அந்தியோகியா திருச்சபைதான் , முதலாம் நூற்றாண்டு காலத்தில் சிறிய ஆசியா முழுவதையும் மாற்றியமைக்க புறஜாதியார் மத்தியில் ஒரு அருட்பணி இயக்கத்தை வழிநடத்தியது. 90% விசுவாசிகள் சந்தை வெளியில் காணப்படுகிற மக்களைக் கொண்ட திருச்சபையாக இருந்தது. அருட்பணியாளர்கள் பெரும்பாலும் கூடாரம் செய்கிறவர்களாக இருந்து தங்கள் ஜீவனத்தை நடத்தினார்கள். தேவ இராஜ்ஜியம் அசைவாடி அவருடைய சித்தம் எல்லா நிலைகளிலும் செய்யப்பட்டு, நடைமுறையில் தேசங்களின் எல்லா கலாச்சாரத்தையும் புரட்சிகரமான மாற்றத்திற்குள் கொண்டு வந்தது எனவும் கூறலாம்.

அந்தியோகியா திருச்சபைக்கும் தற்போது நமது திருச்சபைக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? சந்தை வெளியில் காணப்படுகிற சாதாரண மக்கள் மத்தியில் நிஜத்தில் செயல்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமைதான் அது. எல்லா நிலைகளிலும் தேவனுடைய ஒளியினை பிரிதிபலிக்கும்படி உப்பாகவும் ஒளியாகவும் வாழுகிற வாழ்க்கைக்கு 100% தங்கள் சிந்தையை முழுமையாக மாற்றிக் கொண்டதே அந்த மாபெரும் வேறுபாடாகக் காணப்படுகிறது. அருட்பணியாளர்களும் சபை மூப்பர்களும் சந்தை வெளியில் உள்ள மக்களைக் காட்டிலும் ஆவிக்குரிய ரீதியில் உயர்ந்தவர்கள் என்று கருதப்படவில்லை. தேவனும் அத்தகைய வேறுபாட்டை காட்டவில்லை. எல்லா ஆவிக்குரிய விசுவாசிகளும் இராஜ்ஜியத்திற்கு உரிய ஜீவன முறையில் தீவிரமாக வாழ்ந்து காண்பிக்கிற ஒரு முறைமையை வாழ்ந்து காட்டினார்கள். எனவே நமக்குள் இருக்கிற தேவ இராஜ்ஜியத்தின் நிஜத்தை அவருடைய மகிமைக்காக, நமது தேசத்திலும், அதற்கு மேலாகவும், சாதாரண ஜனங்கள் மத்தியில் அபிவிருத்தி செய்கிறதற்கு நம்மை நிலைவரப் படுத்தும்படி நிரப்பி கீழ்ப்படுத்துவோம்..

## ஜெப குறிப்புகள்:

- ☐ நமது தேசத்தின் எல்லா நகரத்திலும், பட்டிணத்திலும், கிராமத்திலும் உள்ள திருச்சபைகள் அந்தியோகியா திருச்சபையைப் போல ஆகும்படி ஜெபி.
- ☐ ஆவிக்குரிய பலவான்களை உடைக்கவும், விசுவாசிகள் அபரிதமான மாற்றம் பெற்று அவருடைய இராஜ்ஜியத்தை உறவினர்கள், சக பணியாளர்கள், அயலார் மற்றும் நண்பர்கள் அபிவிருத்தி பண்ணவும் ஜெபி. – பட்டி தொட்டிகளில் குறிப்பாக கிழக்கு மலேசியாவில் உள்ள சிறு திருச்சபைகளை, நம்பிக்கையில் பலப்படவும், பலமுள்ளதாக்கவும் ஊழியப்பணிகளில் விடாப்பிடியாக விசுவாசத்தில் செய்து முடிக்கவும் ஜெபி.
- ☐ ஸ்தல மற்றும் அண்டசராசர சுவிசேஷ ஊழியத்திற்கு, ஜெபத்திலும், நிதியிலும், ஆள்பலத்திலும் திருச்சபைகள் முக்கியத்துவம் காண்பிக்க ஜெபி.

▶ நாள் 27: | 2 செப்டம்பர்

# சமூகத்தின் நோக்கம்

தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, **சங்கீதம் 68: 6**

எந்த ஒரு மனிதரும் தனிமையாய் வாழுவதில்லை. எல்லாருமே ஒரு சமூகத்தைச் சார்ந்தே ஜீவிக்கின்றனர். ஒரு நபரும் அது போல ஒன்றிற்கும் மேலான சமுதாயத்தைக் கொண்டிருப்பர். பெரும்பாலும் எந்த ஒரு நபருடைய நம்பிக்கையும், நடத்தையும், குணாதிசயங்களும் அவன் சார்ந்திருக்கிற சமுதாயத்தை பிரதிபலித்தே இருக்கும். அவனுடைய சமூகம் ஒரு வேளை அவனுடைய அயலகமோ, கிராமமோ, நகரமோ, கல்விக்கூடமோ, கல்லூரியோ, பல்கலைக்கழகமோ, வேலையிடமோ, வணிக மையமோ, சமுதாய வட்டமாகவோ இருக்கலாம். தேவனே நம்மை சமூகத்தின் நடுவில் வாழவும் வளரவும் நமது இடத்தை அங்கு வைத்து வைத்திருக்கிறார். சமுதாயம் மிகவும் முக்கியம் வாய்ந்தது ஏனெனில் அது தான் நமக்குத் தொடர்பையும், வாய்ப்புகளையும், பாதுகாப்பையும், ஆதரவையும், உதவிகளையும், அடையாளத்தையும், வளர்த்தியையும் தனி நபருக்கு, குடும்பத்திற்கு, சமூகத்திற்குத் தருகிறது.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ நாம் சார்ந்திருக்கிற சமூகத்திற்காக நன்றி செலுத்துவோம்.
- ☐ இந்த நம்முடைய சமூகம் சமாதானத்திற்காக, சந்தோஷத்திற்காக, பாதுகாப்பிற்காக, நன்மைகளுக்காக, இரட்சிப்பிற்காக, ஆசீர்வாதங்களுக்காக தேவனை உணரும்படிக்கு ஜெபி .
- ☐ தனிப்பட்டோர், குடும்பம், சமூகங்கள் யாவும் சமுதாயத்தின் மூலம் ஆசீர்வதிக்கப்படவும், பலப்படவும் ஜெபி.
- ☐ திருச்சபைகள், சமூகங்கள் மத்தியில் இடைபட்டு, அவர்களுடைய நலன்களுக்காக உதவும்படி ஜெபியுங்கள்.

▶ நாள் 28: | 3 செப்டம்பர்

# தேவனுடைய இராஜ்ஜியமும் சமூகமும்

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். **அப்போஸ்தலர் 2: 41-45**

ஒரு நிஜமான சாட்சியம் என்னவெனில், தேவ இராஜ்ஜியமானது விசுவாசிகள் ஒரு சமூகமாக வாழ்வதற்கு ஏற்ற துணையாய் இருக்கிறது என்பதே. பெந்தேகோஸ்தே நாள் வந்த போது ஆவியானவர் ஊற்றப்பட்ட பொழுது, சபையானது ஓர் உண்மையான சமூகமாக வாழத்தொடங்கியது. ஆதி திருச்சபையில் வெளிப்பட்ட காரியங்கள் தான் இன்றைய திருச்சபைக்கும் உலகத்திற்கும் தேவன் வெளிப்படுத்த விரும்புகிற விசயங்கள் ஆகும். தேவ இராஜ்ஜியத்தின் பிரசன்னத்தின் விளைவுதான் உண்மையான சமூக வாழ்வியலாகும்

**ஜெப குறிப்புகள்:**

- ☐ தேவ இராஜ்ஜியத்தினூடாக வருகிற உண்மையான சமூகத்தை திருச்சபை கண்டு கொள்ள ஜெபி.
- ☐ எடுத்துக்காட்டாக விளங்குகிற சமூகமாக சமுதாயத்திற்கு திருச்சபை காணப்பட ஜெபி.
- ☐ தேவ இராஜ்ஜியம் சபையிலும் ஸ்தல சமூகத்திலும் ஸ்தாபிக்கப்பட ஜெபி.
- ☐ தேவ இராஜ்ஜியத்தின் தாக்கத்தினால் ஸ்தல சமூகங்கள் நிலை நாட்டப்பட நிலை நிறுத்தப்பட ஜெபி.

▶ நாள் 29: | 4 செப்டம்பர்

## சமூகங்களுக்கு மிரட்டல்

அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள். **மத்தேயு 24: 10**

சமூகங்கள் இன்று பெருமளவு மிரட்டலுக்கு ஆளாகியுள்ளன. இது நகரப் புறங்களில் குறிப்பிட்டுச் சொல்லலாம். நவீனங்களும் அளவுக்கு மீறிய கொள்முதல் செய்கிற பேராசைகளும் அதிக அளவில் சமூகங்களை தன்னைக் குறித்தும், தனி நபர் நலன் பற்றியும் அதற்கெனவே ஈடுபடுவதை முக்கியப்படுத்தவுமான தன்மைகள் அவர்களுக்குள் கரை புரண்டோடச் செய்து விட்டது. தவிர பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் ஒரு பெரிய பிளவை ஏற்படுத்தி, பிரித்தாளுகை, ஊழல், குற்றங்கள் மற்றும் சமூக சீர் கேடுகளுக்கு வழி வகுத்து விட்டது. சமூகங்கள் மத்தியில் பாகுபாட்டை விதைத்து விட்டதினால், அதிருப்தி, நம்பிக்கையற்றத் தன்மை, விரோதங்கள் ஆகியவை மேலோங்கி விட்டன. மத வேறுபாடுகளும் சமூகத்தை அழித்து, சமுதாயங்களுக்கு இடையில் பதட்டங்களையும், பிரிவினைகளையும் உண்டு பண்ணி விட்டன. நகரங்களுக்கு அப்பால் உள்ள வசிப்பிடங்களில் போதைப் பொருள்களையும் தாறுமாறுக்களையும் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் உண்டு பண்ணி விட்டன. நலிவடைந்த மேம்பாட்டு திட்டங்களும், பேராசைகளும் சில தரப்பு சமூகத்தினரை அகற்றியும் மாற்று இடங்களிலும் அமர்த்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும், ஜீவனங்களையும் அவர்களது அனுமதி இல்லாமலும் நஷ்ட ஈடில்லாமலும் மாற்றிப்போட்டது.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ நம் சமூகம் எதிர் கொள்ளுகிற இந்த மிரட்டல்களை மேற்கொள்ள தேவன் இடைபட வேண்டுமென ஜெபி.
- ☐ சமூகங்கள் தங்கள் சமுதாயத்தினர் மத்தியில், சமரச மரியாதை, பரஸ்பர உதவி, ஒற்றுமை ஆகியவை செழித்தோங்கும் விதத்தில் நடந்து கொள்ள ஜெபி.
- ☐ அதே வித மரியாதை, பரிவு, பணிவு பல்வேறு பொருளாதார அந்தஸ்து, இனப்பிரிவுகள், சமய பின்னணி உள்ளவர்களுடன் திருச்சபைகள் நடந்து கொள்ள ஜெபி.
- ☐ சமூகங்களுக்கு இடையில் சுபீட்சமும், சமாதானமும் காக்கப்பட்டு பலப்பட ஜெபி.

▶ **நாள் 30:** | 5 செப்டம்பர்

# திருச்சபையும் சமூகமும்.

அவர், திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்;ஆதலால், அறுப்புக்கு எஜமான் (அறுவடையின் எஜமான்) தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். **மத்தேயு 9: 36-38**

இயேசு எப்படி சமுதாயத்திற்குச் சேவை செய்தார்? அவர் எளிமையாக அவர்களுடைய மேய்ப்பன் ஆனார். அவர்கள் தொலைந்து திரிந்து காணப்பட்ட படியினால் இயேசு அவர்களின் தேவைகளை சந்திக்க முயற்சிகள் எடுத்தார். கரிசனையோடும் பரிவோடும் அவர்களை சந்திக்க இயேசு முனைந்த பொழுது, ஜனங்கள் தங்களைத் தாங்களே திறந்து கொடுத்து அவரை ஏற்றுக் கொண்டனர். இன்றைய நமது சமுதாயமும் அதிக வேறுபாடில்லாத நிலையில் தான் இருக்கின்றனர். இவர்களும் இன்னும் அலைந்து திரிகிறவர்களாய் மேய்ப்பரைத் தேடுகிறார்கள். நாம் என்ன வித பங்கினை செலுத்த வேண்டுமென நமது ஆண்டவர் விரும்புகிறார்? அவர் நம்மை, நமது திருச்சபையை, நமது சரீரத்தை ஒப்புக் கொடுத்தவர்களாய் அவர்களுக்கு மேய்ப்பனாக இருக்க வேண்டும். அப்படியென்றால் நமது மந்தை சபை ஸ்தலத்தின் நான்கு சுவர்களுக்குள் அடங்கி வீற்றிருக்க முடியாது. மாறாக நமது மந்தை நம்மைச் சுற்றிலும் உள்ள சமூகத்தினரையே சேர்த்துக் கொள்ள வேண்டி உள்ளது. எப்படி நாம் முழு சமூகத்தினரையே மேய்க்க முடியும்? முழு சமூகத்தினரையும் நமது சபையாக எண்ண வேண்டும். நமது இருதயங்களில் அவர்களை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அவர்களது நலன்கள் நமது பொறுப்பாக மாற வேண்டும். அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே நாம் செல்ல வேண்டும். அவர்கள் மத்தியில் நாம் போதகர் உள்ளம் காண்பிக்க வேண்டும். அவர்களது பிரச்சினைகள் அளவுக்கு அதிகமாக இருக்கலாம் ஆனால் தேவனுடைய வல்லமையும் கிருபையும் தேவைக்கு மேல் நமக்கு போதுமானதாக இருக்கிறது.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ சமூகத்தினர் மத்தியில் தங்கள் பங்கு என்ன என்பதை திருச்சபை உணர்ந்து கொள்ள ஜெபி.
- ☐ சமூகம் முழுவதும் தம்முடைய மந்தை என்பதை திருச்சபை ஏற்றுக் கொள்ள ஜெபி
- ☐ போதகர் பரிவு உள்ளத்தை சமூகத்தினர் மத்தியில் திருச்சபை வெளிப் படுத்த ஜெபி.
- ☐ சமூகத்தினர்கள் தேவைகளை திருச்சபை சந்திக்க தேவன் வல்லமையினாலும் கிருபையினாலும் நிரப்ப ஜெபி.

▶ **நாள் 31:** | 6 செப்டம்பர்

# திருச்சபைகளின் ஒற்றுமை

நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.
**யோவான் 17: 20-21**

தேவ இராஜ்ஜியத்தினால் முழு சமுதாயமே எப்படி தாக்கம் அடைய முடியும்? போதகர்களும். சபைத் தலைவர்களும், திருச்சபைகளும் ஒன்றிணைய வேண்டும். அப்படி இவர்கள் ஒன்று படும் பொழுது, தேவன் அவர்கள் மேல் ஆசீர்வாதம் பொழியப் படும்படி கட்டளையிட்டு, அதுவே சமூகங்கள் மத்தியில் தாக்கத்தையும் உண்டு பண்ணும். அவர்கள் ஒன்றுபடும் பொழுது, அவர்கள் ஆவிக்குரிய அதிகாரங்களைப் பெற்று, இருளின் ஆதிக்கத்தை முறியடிப்பர். குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வர திருச்சபைக்கு தேவையான சாதனங்கள் கிடைக்கப் பெறும். திருச்சபையும் சமூகத்தின் மத்தியில் எடுத்துக் காட்டாகி சமுதாயத்தை பின் பற்றச் செய்வர். இவர்கள் ஒற்றுமைப்படும் பொழுது, சமூகங்களும் திருச்சபையின் மேல் உள்ள நம்பிக்கையை நிலை வரப்படுத்துவர்.

எப்படி இந்த ஒற்றுமை நிலை நிறுத்தப்படும்? முதலாவது போதகர்களும், சபைத் தலைவர்களும் ஒரு போதகர் ஐக்கியத்தை ஏற்படுத்தி ஜெபத்திற்கும் ஐக்கியத்திற்கும் தவறாமல் கூட வேண்டும். இரண்டாவதாக திருச்சபைகள் ஒன்றிணைந்த ஐக்கிய ஜெபத்திற்கு சேர்ந்து ஒற்றுமையைப் பேணி சமூகங்களுக்கு ஜெபிக்க வேண்டும். தலைவர்களும் சபைகளும் ஜெபத்தில் ஆமோதித்து சமூகங்களை ஆசீர்வதிப்பதற்கு வியூகங்களை அமைக்க வேண்டும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ ஒவ்வொரு சமூகங்கள் மத்தியிலும் தேவ ஊழியர்களும் திருச்சபைகளும் ஒன்றிணைய ஜெபி.
- ☐ இயங்குகிற போதகர் ஐக்கியக் குழுவினரையும் ஒன்றிணைந்த ஐக்கிய ஜெபக் குழுக்களையும் தேவன் பலப்படுத்த ஜெபி.
- ☐ சமூகங்களில் தாக்கங்கள் ஏற்படுத்தும் வண்ணம், போதகர்கள் ஐக்கிய குழுக்களின் மத்தியில் வியூகங்களை அமைக்கவும் திட்டங்கள் போடவும் தேவன் உதவி செய்ய ஜெபி.
- ☐ ஒன்றிணைந்த ஜெபக் குழுக்களின் மற்றும் சபைத் தலைவர்கள், திருச்சபைகள் மூலம், ஸ்தல சமூகங்களில், மாற்ற வல்ல தேவ இராஜ்ஜியமானது தாக்கங்களை கொண்டு வர ஜெபி.

▶ **நாள் 32:** | 7 செப்டம்பர்

# இருக்கும் இடத்தில் மன்றாட்டு

ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். **மத்தேயூ 18: 20**

நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன். **யோசுவா 1: 3**

சமூகங்களில் தாக்கங்களை ஏற்படுத்த திருச்சபைகளும் கிறிஸ்தவர்களும் ஜெபத்தில் என்ன செய்ய முடியும்? சபையில் ஒன்று சேர்ந்து ஜெபிக்கும் வேளையில் அதனையே இருக்கும் ஸ்தலத்திலும் செய்யலாம். சமூகங்களில் நல்ல தாக்கங்களை உண்டு பண்ண இரண்டு வழிமுறைகள் உண்டு. முதலாவது, ஜீவியக் குழுக்கள். பொதுவாகவே ஜீவியக்குழுக்கள் குறிப்பிட்ட தங்கள் வீட்டு வட்டாரம், கல்விக் கூடங்கள், பணி மனைகள் போன்ற இடங்களில் விசுவாசிகள் தவறாமல் ஜெபத்திற்கு கூடுகிறார்கள். ஜீவியக் குழுக்களின் வாயிலாக தேவனுடைய பிரசன்னம் மற்றும் ஆளுகையை கொண்டு வந்து நமது சமூகத்தை மாற்றம் அடையச் செய்கிறோம்.

மற்றொரு வழி முறை என்பது ஜெப நடையாகும். யோசுவாவின் புத்தகத்தில் இந்த ஜெப நடையின் சிந்தனை உருவானது. யோசுவாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் உங்கல் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன் என்பதாகும். நமது சமூகங்கள் மத்தியில் இந்த ஜெப நடையை நாம் செயல் படுத்தும் பொழுது, தேவனுடைய ஆளுகையை வழிகளிலும், வீட்டு வட்டாரங்களிலும் நாம் கொண்டு வருகிறோம். நமது வீதிகளையும் சமூகங்களையும் ஆக்கிரமித்துள்ள இருளை நாம் கவிழ்த்து, வெளியேற்றி சமாதானத்தையும் தேவ ஒளியையும் மாற்றி வைக்க முடியும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ பொதுவிலும் சமூகங்களிலும் கிறிஸ்தவர்கள் ஜெபத்தை எடுத்துச் செல்ல ஜெபி.
- ☐ நமது கல்விக்கூடங்களில் கல்லூரி வளாகங்களில், பல்கலைக் கழகங்களில், பணி மனைகளில் ஜெபக்குழுக்கள் ஏற்படுத்தப்பட ஜெபி.
- ☐ வீதிகளிலும், வீட்டு வட்டாரங்களிலும் முறையான ஜெப நடைகள் ஸ்தல சபைகளினாலும் விசுவாசிகளாலும் நடத்தப் பட ஜெபி.
- ☐ சமூகங்களுக்காக சபைகளும் கிறிஸ்தவர்களும் ஜெபிக்கும் பட்சத்தில் தேவ இராஜ்ஜியத்தின் பிரசன்னமும் ஆளுகையும் உணரப்பட ஜெபி.

▶ நாள் 33: | 8 செப்டம்பர்

# தொடர்புகளை ஏற்படுத்துதல்.

தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, **அப்போஸ்தலர் 1: 1**

தேவ இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களை முழுமையாக ஒரு சமூகம் அனுபவிக்க வேண்டுமானால், சுவிசேஷத்தின் செய்தியை விசுவாசித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் ஒரு சமூகம் செய்தியை பரிசீலிக்கும் முன்பாக அது செய்தியாளரை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எவ்வளவு தூரம் திருச்சபையையும் கிறிஸ்தவர்களையும் சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது? அதின் திறவு கோள் நாம் ஏற்படுத்தியிருக்கிற தொடர்பில் தான் இருக்கிறது. சமூகம் நமக்கு செவிகொடுக்க வேண்டுமானால் சபையும் கிறிஸ்தவர்களும் அதிகமான தொடர்பு பாலத்தை ஏற்படுத்த வேண்டும்.

தங்களது சமூகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த உதவும் பொருட்டு சபைக்கும் கிஸ்தவர்களுக்குமான மூன்று படிகள்.
1) சமூகத்து மனிதர்கள் வீடுகளிலும் வேலை செய்யுமிடங்களிலும் முறையான சந்திப்புகள்.
2) ஸ்தல சமூகத்து நிகழ்வுகளில் பங்கெடுங்கள் / ஏற்பாடு செய்யுங்கள்.
3) சமூகங்களின் நலனுக்காக கொடுப்பதின் வழி அவர்களை ஆசீர்வதியுங்கள்.

சபைகளும் கிறிஸ்தவர்களும் இந்த முறைகளை உண்மையுடனும் தவறாமலும் அமலாக்கம் செய்யும் பொழுது சமூகங்களின் இருதயங்கள் மகிழும். அதன் வழி தேவ இராஜ்ஜியத்தின் செய்தியை பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்புகள் திறக்கப்படும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ சமூகங்களுடன் தொடர்பு பாலங்களை உருவாக்குவதின் முக்கியத்துவத்தை சபைகள் காணும்படிக்கு ஜெபி.
- ☐ மேற்சொல்லிய மூன்று படிகளை திருச்சபைகள் ஏற்படுத்த ஜெபி.
- ☐ திருச் சபைகள் மற்றும் சமூகங்களுக்கிடையில் காணப்படும் இடைவெளிகள் குறுக ஜெபி.
- ☐ சபைகள் சமூகங்களால் ஏற்றுக் கொள்ளப்பட ஜெபி.

▶ **நாள் 34:** | 9 செப்டம்பர்

# சரித்திரமும் நமது கண்டெடுத்த தந்தையரின் தரிசனமும்

மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; **அப்போஸ்தலர் 17: 26**

ஒவ்வொரு தேசத்திற்கும் சரித்திரத்தில் நியமித்தவைகளை தேவன் வரையறுத்து குறித்து வைத்துள்ளார். ஒவ்வொரு எல்லையும், பிரித்து வைக்கப்பட்டு உள்ளதும் எல்லாமே ஒரே நோக்கத்தை உடையவை. 1963ஆம் ஆண்டு மலேசியா எனும் நாடு அமைந்தது. அது மலாயா, சபா, சரவாக், சிங்கப்பூர், பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கங்களுக்கு இடையில் தோற்றுவிக்கப்பட்டதும் சபா, சரவாக் மாநிலங்களை பாதுகாத்து, கனப்படுத்தி காக்கிற ஒரு புரிந்துணர்வுடன் ஸ்தாபிக்கப்பட்டது..

இந்த இரண்டு மாநிலங்களின் நலன்களும் ரெய்டு கமிஷன் மற்றும் இண்டெர் கவர்ன்மெண்டல் கமிட்டி அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சரித்திரப் பூர்வ அறிக்கை நமது தேசத்தை கட்டி உருவாக்கின மூதாதைய தந்தையரின் இருதய எண்ணங்களை, சிந்தைகளை, மதிப்புகளை வெளிப்படுத்துகிறது. எந்த ஒரு மாற்றத்தையும் இதில் ஏற்படுத்துகிற முயற்சியானது குரோதமும் இந்த தேசத்தை ஏற்படுத்தின அடிப்படை ஆதாரத்தையே தீண்டுவதற்கு சமானமாகும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ மலேசியாவின் எல்லா பள்ளிகளிலும், மக்களிடத்தும், இந்த சரித்திரப்பூர்வ ஒப்பந்தமும், அதில் உள்ள நிபந்தனைகளும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென ஜெபி.
- ☐ இந்த ஒப்பந்தத்தில் காணப்படும் அசல் விதிகளும் நிபந்தனைகளும் நிலை நிறுத்தப்பட்டு காக்கப்பட ஜெபி.
- ☐ இந்த ஒப்பந்தத்தில் காணப்படும் அசல் விதிகளையும் நிபந்தனைகளையும் எல்லா தனி மனிதரும் மதிக்க வேண்டுமென ஜெபி.
- ☐ மலேசியாவில் இணைவதற்கு முன்பும், அதற்குப் பின்பும் கிழக்கு மலேசியாவிற்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றப்பட ஜெபி.

▶ **நாள் 35:** | 10 செப்டம்பர்

# பொது ஈடுபாடும் சட்ட விதி முறைகளும்.

தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்;
**1 கொரிந்தியர் 14: 33**

சட்ட நியமனக் கொள்கையில் யாருமே சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் கிடையாது. அரசாங்க ஆணையமும், எழுதி நியமிக்கப்பட்ட நீதியின் முறைமைகளின் படியே வகுக்கப்பட்ட சட்டங்களை வெளியரங்கமாய் அமலாக்கம் செய்கிறது. அது தான் இது வரைக்கும் காணப்படுகிற செயல் பாட்டின் முறைமையுமாய் இருக்கிறது. சர்வாதிகாரமாகமானாலும் சரி செங்கோல் ஆட்சியானாலும் சரி, சட்ட நியமனக் கொள்கையானது கோட்டமற்ற தீர்வுகளைப் பாதுகாக்கிறதாக இருக்க வேண்டும். எனவே சட்ட நியமனக் கொள்கை சர்வதிகாரத்திற்கும் செங்கோல் ஆட்சிக்கும் விரோதமாக செயல் படுவதாய் காணப்படுகிறது. கூட்டரசு சாசனம் இந்த மண்ணில் உயர்ந்த சட்டமாக இருப்பதினால் மற்ற எந்த சட்டமும் அதற்கு எதிராக எழும்பினால் அது செல்லுபடி ஆகாது.

மலேசிய கிறிஸ்தவர்களாகிய நாம் நமது கூட்டரசு சட்டம் அனுமதிக்கிற பேச்சு உரிமை மற்றும் சமய உரிமைகளை மதித்து அதனை தற்காக்கவும் அமலாக்கம் செய்யவும் வேண்டும். தேவனால் சுயாதீனமாய் சிருஷ்டிக்கப்பட்ட மானிடர் இந்த உரிமைகளை கவுரமாகக் கருத வேண்டும். நாம் இந்த சட்டத்திற்கும் சமூக மாற்றங்களுக்கும் நம்மால் இயன்ற நடைமுறை செயலாக்கத்தை அளிக்க வேண்டும். இந்த சட்டத்திற்கு உட்பட்ட நேர்மறை தாக்கங்களையும் பொதுக் கொள்கைகளையும் பிரசித்தம் பண்ணும் சமுதாய கடமைகளையும் நெறிகளையும் நாம் அசட்டை பண்ணி விடக் கூடாது. நமது சமுதாயத்தில் புழங்குகிற தெய்வீகமற்ற மற்றும் முரண்பாடுள்ள சட்டங்களுக்கு எதிர்த்து, பொது நலக் கொள்கைகள் ஓங்க நாம் பாடுபட நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமே தவிர நாம் அவற்றிலிருந்து ஒதுங்கி கொள்ளல் கூடாது. நம்மையும் நம் அயலகத்தாரையும் இந்த தற்கால சமூக விவகாரங்களைக் குறித்ததான கல்வி அறிவை புகட்டுவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். அதோடு அந்த விவகாரங்களை நல்வழியில் உருப்பெறப் பண்ண நம்மை ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

## ஜெப குறிப்புகள்:

- ☐ கூட்டரசு சாசனமே நமது உச்ச சட்டமாக தொடர்ந்து நிலைப் பெற ஜெபி..
- ☐ கூட்டரசு சாசனத்தை தவறாக வியாக்கியானம் செய்வதிற்கு எதிராகவும் மலேசியர்கள் தங்களது உரிமைகள் பறிக்கப்படாமலிருக்கவும், மிரட்டப் படாமலிருக்கவும் ஜெபி.
- ☐ மலேசியர்கள் தங்கள் சாசன உரிமைகளை அறிந்திருக்கவும், மற்றவர்களால் தவறாக வழிநடத்தப்படும் முயற்சிகளிலிருந்தும் காப்பாற்றப்படவும் ஜெபி.
- ☐ சாசனத்தை தற்காக்கவும், பொதுக் கொள்கைகள் உருவாக்கத்திற்கு தங்கள் பங்கினை தீவிரமாய் செலுத்த திருச் சபைகள் முன் வரும்படி ஜெபி.

▶ **நாள் 36:** | 11 செப்டம்பர்

# அரசாட்சி

நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள். **1 பேதுரு 2: 13 -14**

எந்த ஒரு நாடும் செழிப்பும் தங்கள் குடிமக்களுக்கு நன்மையும் கொண்டு வர வேண்டுமானால் நல்ல அரசாட்சி இன்றியமையாததாகும். நீதி சூழ்ந்த ஒத்துழைப்புடனான தீர்மானம் எல்லா செயலாக்கத்திலும் இருக்குமானால் நல்ல அரசாட்சி காணப்படும். நீதி எப்பொழுது நிலை நிறுத்தப்பட்டு, நேர்மை நிலை நாட்டப்படும் பொழுதுதான் நல்ல அரசாட்சி உறுதிப் படுத்தப்பட்டு எல்லா தர மக்களும் நன்மை அடைந்து, செழிப்பாகி, ஒருவருக்கொருவர் சுபீட்சத்துடன் வாழுவர். நேர்மை என்பது ஒரு நடைமுறை செயல்பாடு மாத்திரம் அல்ல ஆனால் அதுதான் நமது ஜீவியத்தின் மையமாகவும் சாராம்சமாகவும் இருத்தல் வேண்டும். ஆகவே நமது சாசனமும் ஜனநாயகமும் சிறந்த முறையில் செயல் வடிவம் காணப்பட வேண்டுமானால் சிறந்தவர்களும் ஞானமுள்ளவர்களும் ஆளுகை செய்வதற்கும், தங்களுடைய சுய நலத்திற்காக அல்லாமல் நாட்டின் மேம்பாட்டிற்கு தூர நோக்குடையவர்களாக இருக்கிற சூழ்நிலைகளையும் நாம்தான் நிலை நிறுத்த வேண்டும். இது எப்பொழுது சாத்தியமாகும் என்றால் தேர்தலின் போது வேட்பாளர்கள் வழங்குகிற கொள்கைகளைத் தீர ஆராய்ந்து பார்த்து நமது வாக்கை போடுவதின் மூலம் தான். வாக்களித்த பின்னர் ஜனநாயகம் தொடர்ந்து அரசாட்சியில் வெளிப்படும் பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்டோர் அவர்களின் உத்தரவாதத்தை தொடர்ந்து கோருகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

## ஜெப குறிப்புகள்:

- ☐ நேர்மை, கணக்கொப்புவிப்பு, வெளிப்படையான நல்ல அரசாட்சி முறைகளை அரசாங்கம் நிலை நாட்ட ஜெபி.
- ☐ ஊழல் நிறைந்த, நெறி முறை தவறிய, இனவாதம் கொண்ட, ஆணவம் மிகுந்த தனி நபர்களை அரசாங்கத்திலிருந்து களையெடுக்கப்பட ஜெபி.
- ☐ எந்த ஒரு ஊழலையும், அதிகார துஷ்பிரயோகத்தையும் அரசாங்கத்தில் காணும் பொழுது, பொது மக்கள் தட்டிக் கேட்க வேண்டுமென ஜெபி.
- ☐ அரசாங்கத்தில் பணிபுரிகிற எந்த ஒரு கிறிஸ்தவனும் அச்சமின்றி பாரபட்சமின்றி சத்தியத்தைப் பேச ஜெபி.
- ☐ மக்களுடைய நம்பிக்கையை இழந்த பொது அரசு ஸ்தாபனங்கள் மறுபடியும் சீரமைக்கப்பட ஜெபி.

▶ **நாள் 37:** | 12 செப்டம்பர்

# பொருளாதாரமும் சமூக நலன்களும்

நான் உங்களைச் சிறைப்பட்டுப்போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும். **எரேமியா 29: 7**

2013ல் நமது நாட்டின் உள்நாட்டு வாணிப விகிதாச்சாரம் 5.3% லிருந்து 5.5 வரைக்குமான ஏற்றத்தைப் பெறும் என்று பொருளாதார நிபுணர்கள் கணிக்கின்றனர். இது 2012ன் புள்ளி விவரத்தைவிட சற்று வளர்ச்சி எனலாம். ஆனாலும் நாட்டின் கடன் விகிதமும் ஏற்றம் கண்டுள்ளது. 2013ன் வரவு செலவு திட்டத்தில் அதின் நிதி பற்றாக் குறையை 4% ஆக குறைக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும், 2015க்குள் வரவு செலவு நிதி பற்றாக் குறையை 2.5% ஆக குறைக்கும் அரசாங்கத்தின் அசல் இலக்கை அடையுமா என்பது சந்தேகமே. அரசாங்க செலவினங்கள் தவறாமல் அரசாங்க வரவைவிட அதிகமாகிப் போகும். மலேசிய வரவு செலவு நிதி பற்றாக்குறையானது, மேம்பாட்டு செலவினங்களை விட நடப்பு செலவினங்களுக்கு செலவிடுகிறதே அதிகமாகக் காணப்படுகிறது.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ தேவையுள்ள சமூகத்திற்கு உதவும் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள மேம்பாட்டு நிதியை கொள்ளையடிக்கும் ஊழலுக்கு எதிராக ஜெபி.
- ☐ பணவீக்கம் மற்றும் ஏழ்மை நிலை குறையத்தக்க ஜெபி.
- ☐ நாட்டின் ஐசுவரியம் மற்றும் சாதனங்கள் ஞானமான முறையிலும் விவேகமாக விதத்திலும் செலவிடப்பட ஜெபி.
- ☐ வேலை வாய்ப்புகளும் பொருளாதார வளர்ச்சி பெருகவும், ஐசுவரியம் சரிசமமாக பகிர்ந்தளிக்கப்பட்டு எல்லா நிலை சமுதாயத்தினரும் ஒருவரோடொருவர் நிகராக செழிப்படையவும் ஜெபி.
- ☐ வர்த்தகத்திலும் குழும வாணிப பிரிவிலும் உள்ள கிறிஸ்தவர்கள், இராஜ்ஜிய கோட்பாடுகளைத் தங்கள் தீர்மானங்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுத்த ஜெபி.

▶ நாள் 38: | 13 செப்டம்பர்

# தேசிய ஒற்றுமையும் சுபீட்சமும்

எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, **எபேசியர் 2: 14**

மலேசிய சமுதாயத்தில் இன உறவுகள் என்பது எப்பொழுதுமே உணர்ச்சிகரமானதும் அரசியல் விவகாரமாகவும் காணப்படுகிறது. பல இன கலாச்சார சமுதாயத்தை உள்ளடக்கிய மலேசியாவில், இனங்களுக்கிடையிலான தேசிய ஒருமைப்பாடு சமாதானத்தையும் சுபீட்சத்தையும் கொண்டு வர வேண்டியது மிக அவசியமான காரியம்.

நமது தேசிய ஒருமைப்பாடானது வெறும் வார்த்தையிலும் சகிப்புத் தன்மை நிலையைக் கடந்து பரஸ்பர அங்கீகாரம், மரியாதை அன்பு செலுத்துகிற அளவிற்கு கூட செல்ல வேண்டும். எல்லா தரப்பினர்களுக்கும் பொதுவாகக் காணப்படுகிற இடத்தை எப்படி நிரப்புவது என்று நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கான முயற்சிகளை மலாய், சீன தமிழ் மொழியில் பேசுகிறவர்கள் என்று பெரும்பாலான இனங்கள் மத்தியில் மாத்திரம் உள்ளடக்கிக் கொள்ளக் கூடாது மாறாக ஓராங் அஸ்லி, சபா சரவாக்கில் உள்ள பூர்வீகக் குடியினருக்கும் சேருவதாகக் காணப்பட வேண்டும். எப்பொழுது மலேசியாவின் ஒவ்வொரு இனத்தை சார்ந்து இருக்கும் பிரிவினர்களுடைய மொழி, கலாச்சாரம், சமயம் பரஸ்பர உணர்வோடு மதிக்கப்பளிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அப்பொழுது தான் தேசிய ஒருமைப்பாடோடும் ஒற்றுமையோடும் செல்லுகிற பாதை தொடங்கும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ கிறிஸ்தவர்கள் அவர்களுக்குள் மறைந்து கிடக்கிற இனவாதத்தை அறிக்கை செய்து, மனந்திரும்ப ஜெபி.
- ☐ இன்ங்களுக்கிடையில் உறவுப் பாலங்கள் முகாமையானதாகவும் பலப்படவும் ஜெபி.
- ☐ தேசத்தில் உள்ள அனைத்து இனப்பிரிவினர்கள் மத்தியில் அதிகமான புரிந்துணர்வும், மதிப்பளிக்கும் உணர்வும், தொடர்பும் பெருக ஜெபி.
- ☐ இனவாதமும், இன்ங்களுக்கிடையில் காணப்படும் தொடர்புகளை அரசியலாக்கும் முயற்சிகளுக்கு எதிராக ஜெபி..
- ☐ உண்மையான தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் ஜெபி.

▶ **நாள் 39:** | 14 செப்டம்பர்

# நம் மத்தியில் சபை

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். **மீகா 6: 8**

கிறிஸ்துவின் சரீரமாகிய சபைகள் இந்நாட்டின் மாற்றத்திற்காக தொடர்ந்து ஜெபித்து செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் மலேசியாவில் தேவ இராஜ்ஜியத்தின் உண்மைத்துவ சாட்சியாய் இருப்பதற்காக நாம் எல்லாரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். அப்படியென்றால் நாம் எங்கே இருந்தாலும், எந்த பதவி அல்லது நிலையில் கர்த்தர் நம்மை வைத்திருந்தாலும், நாம் உண்மை, நீதி, நியாயம், மனதுருக்கம் மற்றும் கருணையின் முன்உதாரணங்களாக விளங்க வேண்டும். இம்மாதிரியான தெய்வீக மதிப்புகளை சமூகத்தில் கொண்டு வரும்போது, தேவ பிரசன்னத்தையும் இச்சமுதாயத்தில் கொண்டு வருகிறோம்.

இதன் அடிப்படையில், விசுவாசிகள் ஜெபிப்பதினால் மாத்திரம் அல்ல ஆனால் தேசிய நலனுக்காக பட்டிணத்திலும் நாட்டிலும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்த வேண்டும். இதை அரசியலில் நேரடியாக ஈடுப்படுதலின் மூலமாகவும் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகள் மூலமாய், அரசு சாரா இயக்கங்களுடன் இணைந்து, அரசு சார்ந்த இலாக்காக்கள் மற்றும் ஆர்வ குழுக்களுடன் பேச்சு வார்த்தை மூலமாகவும், மற்றும் நம்மை பொது சேவைகளில் ஈடுபடுத்திக் கொள்வதின் மூலம் போன்ற பல்வேறு வழிகளில் செய்ய முடியும்.

**ஜெப குறிப்புகள்:**

- ☐ தேவனின் தயவு சபைகளின் மேல் தங்கியிருக்க ஜெபி
- ☐ சபைகள் தேசத்திற்கு ஒரு ஆசீர்வாதமாக விளங்க ஜெபி
- ☐ சபைகள் தேச மேம்பாட்டில் ஈடுப்பட ஜெபி
- ☐ சபைகள் இந்த தேசத்தில் மகத்தாய் கருதப்பட ஜெபி

▶ **நாள் 40:** | 15 செப்டம்பர்

# தேசத்தை அர்ப்பணித்தல்

இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலிருமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். **வெளி 7:9**

மலேசியாவில் பலவேறு இன குழுக்கள் நல்லிணக்கத்திலும், ஒவ்வொரு பிரிவினரும் இந்த நாட்டின் கலாச்சார வாழ்க்கையை வளப்படுத்த வித்திடுகிறவர்களாகவும் இன, மத மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையும் வேறுபாடுகளும் நம் நாட்டில் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பியல்பாகும்.

நாம் பல இனங்கள் மற்றும் மதங்கள் கொண்ட இந்நாட்டின் அனைத்து பிரச்சினைகள் மற்றும் தோல்விகளை நன்கு உணர்ந்தவர்களாக இருக்கிறோம். ஆனாலும், நாளை 50 வது மலேசியா நாள் பெருவிழா கொண்டாட்டத்திற்கும் மலேசியாவின் யூபிலிக்கும் தயாராகும் வேளையில் நம்மை சுற்றி நடக்கிறவைகளைப் பார்த்து நாம் கலக்கமடைய வேண்டாம். வாருங்கள், இந்த வேறுபாடுகள் கர்த்தர் மலேசியாவுக்கு கொடுத்த பரிசாக ஆசீர்வாதமாக கொண்டாடும் சபையாக மாறுவோம்.

வேறுபாடுகள் இருப்பினும் இன்னொருவரை நம் குடும்பத்தில் ஒரு உறுப்பினராய்ப் பார்ப்போம். சவால் என்னவென்றால் எல்லா சமூகங்களிலும் நீதி, இரக்கம் மற்றும் மனதுருக்கத்தை என்றும் நிலைக்க செய்ய வேண்டும். அப்போது தான் நமக்கு பின்வரும் தலைமுறைகள் வின்ஸ்டன் சர்ச்சில் சொன்னது போல், இது அவர்களின் மிக சிறந்த நேரம் ஆகும்^ என்று கூறுவார்கள்.

பிரகடனம்: *எல்லாம் வல்ல ஆண்டவரே, நாங்கள் உங்களுக்கு எங்கள் அன்பான தேசமாகிய மலேசியாவை, அர்ப்பணிக்கிறோம். மலேசியா உங்களுடையது! நீங்கள் பன்முகத்தன்மை கொண்ட ஜனங்களை கொடுத்து. ஒவ்வொருவரையும் அதினதின் இடங்களிலும் நேரங்களிலும் நியமித்திருக்கிறீர். எங்கள் ஆவிகள் சூழ்நிலைகளுக்கு மேலாக எழும்பி உம் அன்பு, தயை மற்றும் கிருபையோடு ஈடுபட்டு மற்றவர்களை சென்றடைய உதவும். எங்கள் சக குடிமக்களை உம் கண்களால் உம்முடைய அன்பு பிள்ளைகளாகப் பார்க்க உதவும். ஆசீர்வாதத்தை கொண்டு வருகிற பாத்திரமாகவும் மலேசியாவின் மாற்றத்திற்கும் எங்களை ஒப்புக்கொடுக்கிறோம். ஆண்டவராகிய தேவனே, மலேசியாவில் உமது யூபிலியை வெளிப்படுத்தும்!*

## ஜெப குறிப்புகள்:

- ☐ அனைத்து பல்வேறு மக்களிடையே இதயங்கள் புதுப்பிக்கப்பட்ட ஜெபி.
- ☐ மலேசியாவை கர்த்தருக்கு ஒப்புக்கொடு
- ☐ நம் நாட்டையும் அதின் தலைவர்களையும் கைவிட்டு அவர்களை சபித்திருந்தால் மன்னிப்பு கேள்
- ☐ தேவன் நேசிப்பது போல் நாம் மலேசியாவை அர்ப்பணிப்புடன் புதுப்பித்தலோடு நேசிக்க ஜெபி.
- ☐ மலேசியாவிற்கு நம் சொந்த வாழ்க்கை மற்றும் சபை நடவடிக்கைகள் என்ற வரையறுக்கப்பட்ட எல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு விரிவான தரிசனத்திற்கு ஜெபி.